PAATHUKAVALAN
REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) FOUNDED 19 FEB 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 126
இதழ் 05-06
பக்கங்கள் 16
விலை 10/=
1 சித்திரை 2002
ஈஸ்ரர் சிறப்பிதழ்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 04 APR 2002 PERIODICAL DIVISION

## உயிர்ப்பு விழா சிறப்பிதழ் - 2002

# நிரந்தர அமைதி ஏற்பட்டவுடன் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மாமனிதர்கள் ரணிலும் பிரபாவும்

## ஆயரின் ஈஸ்ரர் செய்தி





## பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க எம்மிடையே தொடர்பாளர்களாக இருந்தவர்கள் ஆயர்கள்

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க**





## ஈஸ்ரர் வாழ்த்துக்கள்

## HAPPY EASTER

நீதியின்றி சமாதானமில்லை மன்னிப்பின்றி நீதியில்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லோறன்ஸ் அடிகளாரின் தந்தையார் காலமானார்

ஏ. லோறன்ஸ் அடிகளாரின் அன்புமிகு தந்தையார் கொ. அந்தோனிமுத்து 21.03.2002 அன்று காலமானார். புனித மரியன்னை பேராலயத்தில் பணிபுரிந்த இவரை பங்கு மக்கள் நன்கு அறிவர். யாழ் மறைமாவட்டத்திற்கு தம் மகனை அர்ப்பணித்த இவர் இறைவனின் இன்ப சன்னிதானத்தில் இளைப்பாறுவாராக.

## புனித மரியாள் பேராலயம், யாழ்ப்பாணம்

### ஆயர் தலைமையில் புனிதவாரச் சடங்குகள் - 2002

**24-03-02 குருத்தோலை ஞாயிறு**

காலை 6.30 முதல் திருப்பலி
காலை 8.30 இரண்டாம் திருப்பலி
மாலை 5.15 மூன்றாம் திருப்பலி

**25-03-02 திங்கள்**

மாலை 5.00 - குருக்கள் வாக்குறுதி புதிப்பித்தலும் தைலங்கள் மந்திரிக்கும் சடங்கும் திருப்பலியும்

**28-03-02 புனித வியாழன்**

மாலை 6 - இறுதி உணவு ஞாபகர்த்த திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் 8 மணி தொடக்கம் 9 மணி வரை பொது ஆராதனை

**29-03-02 புனித வெள்ளி**

காலை 6.30 திருச் சிலுவைப்பாதை தியானம் பேராலய திறந்த வெளியரங்கில்
மாலை 5.30 திருச்சிலுவை ஆராதனையும் நற்கருணை பந்தியும்

**30-03-02 புனித சனி**

காலை 6.30 இயேசு திருச்சிலுவையில் மொழிந்த வாக்கியங்களில் தியானம்
மாலை 11.00 பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும் திருப்பலியும்

**31-03-02 யேசு உயிர்த்த ஞாயிறு**

காலை 5.30 முதல் திருப்பலி
காலை 6.30 இரண்டாம் திருப்பலி ஆயர் தலைமையில் இடம்பெறும்
காலை 8..30 மூன்றாம் திருப்பலி
மாலையில் திருப்பலி இடம் பெறமாட்டாது.

## கத்தோலிக்க மறைபாடநெறி ஆசிரியர்களுக்கான அறிவித்தல்

ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் உள்வாங்கப்படாமல் பாடசாலைகளில் கடமையாற்றும் கத்தோலிக்க பாடநெறி சார்ந்த ஆசிரியர்கள் நன்மைபெறும் பொருட்டு தேசிய ரீதியில் நடாத்தப்படும் பயற்சிநெறிகளில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் R.C.X. நேசராஜா அடிகளார் தெரிவித்துள்ளார். இப்பயிற்சி நெறிகள் பற்றிய மேலதிக விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும். அதற்கு உதவியாக முதலில் இது சம்பந்தப்பட்டோரிடம் இருந்து தரவுகளை உடனடியாக மறைக்கல்வி நிலையத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள். தரப்படவேண்டிய விவரம் பெயர், தற்போதைய முகவரி, தெரிவுசெய்யும் பாடநெறி, தொலைபேசி இலக்கம் (இருப்பின்), தற்போது கற்பிக்கும் பாடசாலை. அனுப்பப்படவேண்டிய முகவரி இயக்குனர், மறைக்கல்வி நடுநிலையம், தபால்பெட்டி இலக்கம் 2, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## இறைதியான திருவிழிப்பு ஒளிநாடா வாடகைக்கு

கடந்த 08.10.2001 இல் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறைதியான திருவிழிப்பு வழிபாட்டின் ஒளிநாடா திருவழிபாட்டு நிலையத்தினரால் வாடகைக்கு விடப்படுகின்றது. இரண்டு ஒளிநாடாக்கள் கொண்ட இத்தொகுப்பின் ஒருநாள் வாடகையாக 60ரூபா அறவிடப்படும்.

அருள்தந்தை அகஸ்ரீன் முண்டக்கட், சகோதரன் ஜோர்ச் ஆகியோரின் இறையுணர்வூட்டும் நிகழ்வுகளை மீளப் புதுப்பித்துக் கொள்ள இவை துணைபுரியும். பங்குத்தந்தையர்கள், தத்தம் பங்குகளில் இறைதியான வழிபாடுகளை குழுரீதியில் நடத்துவதற்கு இவ் ஒளி நாடாக்களை பயன்படுத்தலாம்.

குருக்கள், துறவியர், பொதுநிலையினர் இதனைப்பெற்று பயனடையுமாறு அழைக்கின்றோம்.

தனிப்பட்ட பொது நிலையினர் இவ் ஒளி நாடாக்களைப் பெற்றுக் கொள்ள பங்குத்தந்தையர்களின் சிபார்சுக் கடிதம் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## நீங்கள் இறைவன் தங்கும் ஆலயம்

யாழ். மறைமாவட்ட இளைஞர் ஒன்றியத்தின் தவக்கால இறைதியானம் கடந்த 10.03.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்றது.

இத்தியான நிகழ்வில் மறைமாவட்டத்தின் 14 பங்குகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்து சிறப்பித்தனர். ஆரம்ப நிகழ்வு மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளின் இறைபாடலோடு ஆரம்பமாகியது.

பாடலைத் தொடர்ந்து ஆரம்ப தியான உரையை அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ் நிகழ்த்தினார். இத்தியானத்தில் கலந்துகொண்ட இளையோர் ஆன்மீகத்தில் தம்மை அர்ப்பணிக்கக் கூடியவர்களாக உள்ளனர் என்பதை தனது உள்ளுணர்வு கூறுகின்றது என்றார். நல்ல தியாக உள்ளத்துடன் கலந்துகொண்டவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்றும் கூறினார்.

அவரது உரையினை அடுத்து மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் தமது தியான உரையில் இன்றைய நாள் அருளின் நாளாக அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த உங்களை இறைவன் ஆசீர்வதிப்பார்.

மனமாற்றத்துக்கான அழைப்பு மிகவும் காத்திரமானது. எம்முடைய வாழ்க்கையிலே மிகமுக்கியமான பலவீனம் என்ன? என்று சீர்தூக்கி ஆராயவேண்டும்.

செய்யவேண்டிய பணியை செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டிய முறையில் செய்துமுடிக்க வேண்டும். "கடவுள் உங்களை விலைகொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்" என்று கூறினார். இதனைத் தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் கேட்கப்பட்டது.

தியானத்தின் இறுதியில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் இறுதியில் யாழ் அடைக்கல அன்னை ஆலய உதவிப் பங்குத்தந்தை அருள் திரு ஜோ. றெனோல்ட் தமது நன்றி உரையில் இறைதியானத்தை வழிநடத்திய குருக்களுக்கும் கலந்துகொண்ட இளைஞர் யுவதிகளுக்கும் நன்றிகூறி வழிபாட்டினை முடித்து வைத்தார்.

பூவிலிங்கம் ஜெயவதனி

## இளவாலை மறைக்கோட்ட இளையோருக்கான இவ்ஆண்டின் தவக்கால ஞானவொடுக்கம்


கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 9.45 மணியளவில் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் அன்றைய நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. பல ஆலயங்களிலிருந்து நூற்றிற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர்.

நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ,அன்றைய நிகழ்வுகள் ஆரம்பமாகின. நாம் இறைவனைப் புகழவேண்டும் என்றால் வெட்கம் பாராது வாய் திறந்து சத்தமாக கரங்களால் தட்டி மனமாரப் புகழ அழைப்பு விடுத்து நின்றார். என்ன நடந்தாலும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தி அவரைப் புகழுமாறு கேட்டிருந்தார். இதற்கு வேதாகமத்திலிருந்து பல ஆதாரங்களை வாசித்து விளக்கினார்.


இன்னும், இறைவன் இல்லாத இடம் நரகம். எனவே இறுதித் தீர்ப்பிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள எமது குற்ற உணர்வுகளை உணர்ந்து பாவசங்கீர்த்தனம் பெற்று தூய ஆவியால் நிரம்ப அன்றைய நாளில் அன்பாகக் கேட்டிருந்தார். இதற்கிணங்க அநேகமானோர் பாவசங்கீர்த்தனம் பெற்றிருந்தனர். தொடர்ந்து அருள்தந்தை சாள்ஸ் அடிகளாரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இறுதியில் மானிப்பாய் உதவிப் பங்குத்தந்தை அன்றைய நாளில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியுரை கூறினார்.

செல்வி. ஞா. டெவ்லின், மானிப்பாய்.






நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்திலிருந்து பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் வரை யாழ். நகர வீதிகளூடாக வந்த மாபெரும் சிலுவைப் பாதையின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வாழும் உரிமையை உறுதிப்படுத்துவோம்! என்னும் தலைப்பில் யாழ். மறைக்கோட்ட இளையோர் இணைந்து நடத்திய இந்த மாபெரும் சிலுவைப் பாதையில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். நாட்டு நிலைமைகள் காரணமாக சில ஆண்டுகளாக நடத்தப்படாத பெரிய சிலுவைப் பாதைகள் இப்போது நாட்டு நிலைமைகளில் சற்று மாற்றம் ஏற்பட்டதால் பல இடங்களிலும் நடத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.



இது ஒரு கத்தோலிக்க ஆலயம் என்பது நிட்சயமாக உங்களுக்குத் தெரிந்தது. ஆனால், எந்த கத்தோலிக்க ஆலயம் என்று உங்களுக்குத் தெரிகிறதா?

இலங்கையின் வடபகுதியில் முன்னணி யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்கும் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் - அரிபாலை புனித யூதாததேயு யாத்திரைத் தலமே இதுவாகும்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இவ்வாலயம் பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டு யுத்தத்தின் சாட்சியாக இன்னும் நிமிர்ந்து நிற்கின்றது.

மீண்டுமொரு தடவை அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தை கம்பீரமாக கட்டியெழுப்பவும் அங்கு வழிபாடுகளையும் யாத்திரைகளையும் செய்யும் காலம் எப்போது வரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தநிறுத்தம் பாரிய சத்தத்துடன் வெடித்த குண்டுகளையும் ரொக்கட்டுக்களையும் துப்பாக்கிகளையும் அமைதிப்படுத்தியுள்ளது

## யாழ். ஆயர் பிரதமருக்கு ஆயர் இல்லத்தில் தெரிவிப்பு

மாண்புமிகு பிரதமர் அவர்களே! பிரதமராக தாங்கள் யாழ் நகருக்கு மேற்கொண்டுள்ள இந்த முதலாவது வருகையின்போது தங்களை யாழ். நகருக்கும் குறிப்பாக ஆயர் இல்லத்திற்கும் வரவேற்பதில் பெரும்கிழ்ச்சியடைகிறோம். தங்களோடு வந்துள்ள அமைச்சர்களையும் அன்போடு வரவேற்கிறோம். தேர்தல் முடிவுகள் வந்து தாங்கள் பிரதமராக அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்தில் திருமலை - மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையும் நாமும் தங்களை சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தபோது யுத்தத்தை நிறுத்தி சமாதான முயற்சிகளை மேற்கொள்ள மக்கள் கொடுத்த ஆணையே இத்தேர்தல் வெற்றிகளென தங்களுக்கு நினைவூட்டினோம்.

கடந்த 20 வருடங்களாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த மக்கள் மனதுகளில் தாங்கள் மிகவும் கவனமாகத் தெரிந்த அமைச்சர்களும் தாங்களும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்துக்கான நிரந்தரத் தீர்வினைக் காண எடுத்த தீர்க்கமான செயற்பாடுகளும் மக்கள் மனதில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தோற்றுவித்துள்ளது. கடந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திலிருந்து விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தமும் அதற்கு இசைவாக தங்கள் அரசு கொடுத்த பதிலும் மிக நீண்ட காலமாக பாரிய சத்தத்துடன் வெடித்த கனன் குண்டுகளையும், ரொக்கட்டுகளையும், துப்பாக்கிகளையும் அமைதிப்படுத்தியுள்ளது. நோர்வே அரசின் முன் முயற்சிகளின் வழியாக சமாதானத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எம் அனைவருக்கும் பெரும் நிம்மதியை தந்துள்ளது. வடபகுதியிலுள்ள பாதுகாப்பு படையினர் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதிலும் மக்கள்மீது விதிக்கப்பட்ட தடைகளை நீக்குவதிலும் பெரிதும் ஒத்துழைத்துள்ளார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

நீண்டகாலமாக அரச நடவடிக்கைகளோடு பெரும் தொடர்பற்றவர்களாக இருந்த மக்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் வருகையும் மற்ற அமைச்சர்களின் வருகையும் நிலைமையை இயல்பு நிலைக்கு கொண்டுவந்து மக்கள் வாழ்வுக்கு பெரிதும் துணைபுரிந்துள்ளது. படிப்படியான ஆனால் உறுதியான முன்னேற்றத்தின் வழியாக சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது மக்கள் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்த பெரிதும் தேவையானது.

### கண்டி ஏ9 பாதை திறப்பு

யாழ். குடாநாட்டில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த **A9** கண்டி வீதி திறக்கப்படவேண்டும் என்பதை திரும்பவும் நாம் இங்கு குறிப்பிடத் தேவையில்லை. அது உண்மையாகவே அநேக இடையூறுகளை நீக்க பெருமருந்தாக அமையும். தொலைத்தொடர்பு, இலகுவான போக்குவரத்து, வர்த்தக முன்னேற்றம் என்பவற்றை யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்குமிடையில் இலகுவாக்கும். அதனைவிட மக்களின் தகர்ந்து போன இருப்பிடங்கள் சரிசெய்யப்படல், மக்கள் தங்கள் கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் செல்லல், எனப்பல இன்னும் செய்யப்பட வேண்டி உள்ளது. இவை எல்லாவற்றையும் விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் நீதியான, ஏற்றுக்கொள்ளக்கூடிய, அதிகாரப் பகிர்வு மூலமான நிரந்தர தீர்வொன்றே உறுதிசெய்யும்.

இந்த வேளையில் கத்தோலிக்க மக்கள் சார்பாக மூன்று வேண்டுகோள்களை தங்கள் முன் வைக்க விரும்புகின்றோம்.

1. போரினால் மக்கள் சிதறிப் போனமையால் எமது சிறுவர்களின் கத்தோலிக்க கல்வி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க அதிபர்கள் ஆசிரியர்களுடைய தொகை எமது பாடசாலைகளில் வெகுவாக குறைந்துள்ளது. எமது மறைமாவட்டத்தின் ஒரே கத்தோலிக்க தனியார் பாடசாலையான புனித பத்திரிசியார் கல்லூரி போரினால் சேதமடைந்துள்ளது. குறிப்பாக தங்கள் உதவியை அதற்கு வேண்டி நிற்கின்றேன். புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அதனை தரிசித்து உதவிசெய்வதாக வாக்களித்திருக்கிறார்.

2. அளம்பில் முல்லைத்தீவு தொடக்கம் கடற்கரையோரமாக வலைப்பாடு வரை வசிக்கும் எமது கத்தோலிக்க மக்கள் யுத்தத்தினாலும் அதன் விளைவுகளாலும் பெரிதும் தாக்கப்பட்டுள்ளார்கள். ஆலயங்கள், பாடசாலைகள், கன்னியர் மடங்கள் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன. ஏராளமானவர்கள் வீடுகளுக்கு திரும்ப முடியாமல் இருக்கிறார்கள். இவர்களது நீண்ட துன்பத்துக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும்.

3. ஆயர் இல்லத்தோடு இணைந்துள்ள புனித மரியன்னை பேராலயம் அநேக வழிபாட்டு வேளைகளில் மின்சாரம் இல்லாமையால் இருட்டாகவே உள்ளது. 10 கே.வி. மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று இதற்குப் போதுமானது.

தங்களது நெருக்கமான நிகழ்ச்சித் திட்டத்தில் எம்மைத் தரிசிக்க தாங்கள் வந்தது எமக்கு பெருமகிழ்வைத் தந்தது. எல்லாம் வல்ல இறைவனின் ஆசீரை தங்கள் மேலும், தங்கள் அரசாங்கத்தின் மேலும் வேண்டி சமாதானத்துக்காக தாங்கள் தொடங்கியுள்ள இந்த முன்முயற்சியை உறுதியோடும் நேர்மையோடும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.





# பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எமக்கிடையேயிருந்த இடைவெளியை குறைத்து தொடர்பாளர்களாக செயற்பட்டவர்கள் ஆயர்கள்

## யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

யாழ். ஆயர் அவர்கள் கொழும்பில் பல தடவைகள் என்னைச் சந்தித்துள்ளார். அப்போது யாழ் நகருக்கு நான் வரும்போது தங்கள் இல்லத்தில் சந்திப்பேன் என அவருக்கு கூறியிருந்தேன். அதனை நிறைவேற்றம் முகமாகவே எனது முதலாவது வருகையின்போது ஆயர் இல்லத்திற்கு வந்திருக்கிறேன். சமாதானத்தை ஏற்படுத்த யாழ். மறைமாவட்ட ஆயர் போன்றோர் காட்டும் ஆர்வம் பெருந்துணையாக உள்ளது. யாழ். ஆயருக்கும் மற்றைய கத்தோலிக்க ஆயர்களுக்கும் நன்றிகூற வேண்டிய ஒரு கடப்பாடு உண்டு. சமாதான முயற்சிகளில் நிச்சயமாக கத்தோலிக்க ஆயர்களுக்கு பெரும் பங்கு உண்டு. யாழ்ப்பாணம், மன்னார், திருமலை-மட்டுநகர் ஆயர்கள் எமது நாட்டில் இருக்கின்ற எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்ய அவசியத்தையும், அவசரத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எமக்கிடையே இருந்த இடைவெளியை குறைத்து தொடர்பாளர்களாக செயற்பட்டவர்கள் ஆயர்கள். சமாதானம் இன்னும் வந்துவிடவில்லை. சமாதானத்துக்கான ஒரு ஆரம்பமே இந்த முயற்சியாகும். யாழ். ஆயரிடமும் மற்றைய ஆயர்களிடமும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைக்கான அனைத்து செயற்பாடுகளுக்குமான உதவியை வேண்டிநிற்கிறேன். குடாநாட்டுமக்களுக்கு முக்கிய தேவையாக உள்ள ஏ9 பாதையை திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றார். பாழ்.ஆயர் அவர்களுக்கு பிரதமரால் செயற்கை கண்வில்லையும் **(Contact lens)** அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் யாழ் வருகையின்போது ஆயர் இல்லத்தில் பிடிக்கப்பட்ட மேலும் சில படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவதாயின் தரிசனங்கள்



**தொடர் கட்டுரை 3**

**(எலிஜா தீர்க்கதரிசி காலம் முதல் 20ம் நூற்றாண்டு வரை)**

### 1561 – அவில்லா – ஸ்பானியா

ஸ்பானியா தேசத்தில் உள்ள அவில்லா எனும் இடத்தில் உள்ள பிரபுக்களின் குடும்பத்தில் 1515 திரேசா பிறந்தார். அவரும், அவருடைய சகோதரனாகிய றொட்றிகோவும் தேவ பக்தியுள்ள பிள்ளைகளாக இருந்ததால், சிறு வயதிலேயே, தாங்கள் மத போதகர்களாக மாறிக் கிறிஸ்துவின் தொண்டில் ஈடுபட்டுத் தம்முயிரையும் தியாகஞ் செய்ய வேண்டும் என விரும்பினர். அவர்கள் இருவரும் சிறிய கெபிகள் தம் இல்லத்தில் அமைத்து தினமும் பக்தியுடன் செபித்து வந்தனர். திரே



சாவிற்கு 12 வயதில் அவரது தாயார் இறந்ததால் துயரடைந்த அவர் தேவதாயரிடம் தங்களுக்கு விசேட பாதுகாப்பும் உதவியும் தரும்படி வேண்டினாள். அவவின் உருக்கமான செபத்திற்கு மிகுந்த கருணையுடனும் தாராளமாகமவும் தேவதாய் செவிசாய்த்தார். புனித திரேசா போல வேறு ஒரு புனிதரும் உன்னதமான தேவஅருளை அனுபவித்ததில்லை. அவருக்குப் பல தடவைகள் தேவதூதர்களின் தரிசனம் கிடைத்தது. அவற்றின் கூற்றுப்படி "சொரூபீம் ஒருவர் தனது கையில் வைத்திருந்த தங்க மயமான கூர்மையான ஒளி வீசும் ஆணியை எனது இருதயத்தில் ஊடுருவினார். அதனை வெளியே எடுக்கும்போது, எனது இருதயம் ஆண்டவனின் மேல் அன்பால் நிறைக்கப்பட்டது. அப்பொழுது என்னில் ஏற்படுத்தப்பட்ட காயத்தினால் வேதனை ஏற்பட்டது. எனினும் பூரணமான மகிழ்வையும் ஏற்படுத்தியது. அந்நேரத்தில் ஆன்மாக்களுக்கும் ஆண்டவனுக்குமிடையில் உண்டாக்கப்படும் பந்த பாசம் பூரணமானதும், வர்ணனைக்குள் அடக்க முடியாததுமாகும். நான் அந்நேரம் பட்ட வேதனையுடன் தோன்றிய மகிழ்ச்சி உலகில் எந்த மகிழ்ச்சியுடன் ஒப்பிடமுடியாதது" புனித திரேசாவிற்கு தேவதாயாரின் தரிசனம் மட்டுமல்ல, புனித சூசையப்பரின் தரிசனமும் கிடைத்தது. தேவமாதா பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட காட்சியும் தெரிந்தது. திரேசா விடாமுயற்சியுடன் கார்மேல் சபையையும் கிறிஸ்தவ உலகையும் சீராக்கப் பாடுபட்டார். தாழ்ச்சி, ஏழ்மை போன்ற புண்ணியங்களை விரும்பி ஏற்றிருந்த அவர், சிறந்த அறிவாளியாகவும் நகைச்சுவை உணர்வுள்ளவராகவும் இருந்தார். அவர் எழுதிய நூல்கள் ஆன்மாவின் உன்னதத் தேடலுக்கு வழிகாட்டியாக அமைந்தன. கல்வியறிவிலும் உயர்ந்தவராய் விளங்கிய அவர் தெய்வீகக் காட்சிகள் அனுபவங்கள் பற்றி மிகவும் அவதானமாக இருந்தார். இவ் அனுபவங்கள் அவர் வெளியிட்ட கருத்துக்கள், எதிர்கால சந்ததியினருக்கு, சிறந்த புத்திமதியாக இருந்தது. அவவின் கூற்றுப்படி, "ஒருவரால் காணப்படும் காட்சியில் உள்ள நன்மையோ தீமையோ அக்காட்சியைக் காண்பவரைப் பொறுத்தே உள்ளது. காட்சியைக் காண்பவர் அதனைத் தாழ்மையுடன் ஏற்றுப் பயனடைபவரா? தாழ்மை அவரிடம் இருந்தால் ஒரு தீங்கும் நேராது. ஆனால் அவரிடம் தாழ்ச்சி எனும் பண்பு இல்லாவிடில் அது கடவுளின் காட்சி எனினும் பயனற்றதாகிவிடும். புனித திரேசாவின் நூல்கள் அவரின் சிறந்த சாதனைகள் ஆகும். அவ ஓர் தனித்துவம் பெற்றவர், கடவுளின் உன்னதத் தன்மையைப் பெற்று உணர்ந்தவர். கடவுளின் பாதங்களின் அடியில் தாம் எப்பொழுதும் தங்கியிருக்க விரும்புகின்றவர், அவவின் நூல்களின் மூலம் நிறைய அறிவைப் பெறலாம். புனித பிரான்ஸிஸ் அசிசியாரின் பெருநாளன்று இவ்வுலகை நீத்தார் (ஐப்பசி4,1582). அவவின் ஆன்மாவை அழைத்துச் செல்ல யேசுவும், அவரது தாய் மரியாள், புனித சூசையப்பரும் மற்றும் புனிதர்கள் பலரும் வந்தனர் என நம்பப்படுகின்றது. இனித் தொடர்வது 1842ம் ஆண்டில் உரோமாபுரியில் நடந்த புதுமை ஆகும்.

### 1842 (Alphonse M. Ratisbonne - Rome)
### அல்போன்ஸ் நற்றிஸ்பொன்

அதிக செல்வம் படைத்த யூத வங்கியாளர்களாகிய அல்சேஷன் எனப்படும் குடும்பத்தில் அல்பொன்ஸ் நற்றிஸ்பொன் பிறந்தார். கத்தோலிக்கத் திருச்சபையின் மேல் அதிக வெறுப்புக் கொண்டிருந்த அவர் அதனைப் பித்தர்களின் சபை என நினைத்தார். தமது 28வது வயதில், தான் திருமணம் செய்வதற்கு முன்பு 1 வருடகாலம் பிரயாணம் செய்து



மகிழ்வாக இருக்கவேண்டி ரோமாபுரிக்குச் சென்றார். அங்கு காணப்பட்ட பழமைவாய்ந்த அரிய கலைப் பொருட்களைப் பார்த்து மகிழ்வடைந்தார். அங்கு தனது பள்ளிக்கூடத்தில் கல்வி கற்ற பழைய நண்பன் கஸ்ரவ் டி பஸ்ஸியர்ஸ் என்பவரையும் அவரின் தந்தையாகிய பிரபுவையும் சந்

**திருமதி புவனேஸ்வரி அம்மா இரத்தினராஜா**
ஓய்வுபெற்ற ஆசிரியை
புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை

தித்தார். அப் பிரபு புரட்டஸ்தாந்து மதத்தில் இருந்து கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருந்தார். தூய ஆவியினால் நிரப்பப்பட்ட அவர் தனது புதிய மதத்தைப் பற்றி வாய் ஓயாது கூறினார். அதனைக் கேள்வியுற்ற நற்றிஸ்பொன்னிற்கு எரிச்சலும் வெறுப்பும் உண்டாகியது. அவர்கள் வீட்டில் தங்கியிருந்தபொழுது ஓர் இனிய மாலைப் பொழுதில் ஒரு விருந்து நடந்தது. அந்நேரத்தில் பிரபு அல்பொன்ஸ் நற்றிஸ்பொன்னிற்கு, புனித மரியாளின் புதுமைப் வரவணிக்கத்தை அவருக்குக் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்டபொழுது அது எவ்வளவு பொருத்தமற்ற செயலென எண்ணியபடியே அதனைப் பெற்றுக்கொண்டவர், தனது வருங்கால மனைவிக்கு ஓர் ஞாபகச் சின்னமாகக் கொடுக்கலாம் என எண்ணினார். ஆனால் அப்பிரபு அவரை நோக்கி "நீர் இவ்வடையாளத்தின் செபத்தைக் (மிகவும் இரக்கமுள்ள தாயே) காலையும் மாலையும் செபிக்க வேண்டும் என வற்புறுத்திக் கூறினார். அதைப் பெற்றுக்கொண்டு அதனைப் பார்த்து எழுதிக் கொண்டு திருப்பித் தருவதாக கூறிப் பிரபுவின் மாளிகையை விட்டுச்சென்றார். ஆனால் எவ்வளவோ முயன்றும் அச் செபத்தினை அல்பொன்ஸினால் தன் மனத்தை விட்டு அகற்ற முடியவில்லை. ஜனவரி 20ம் திகதி அல்பொன்ஸ் அப் பிரபுவுடன் ஓர் மதிய விருந்திற்குச் சென்று கொண்டிருந்தபொழுது வழியில் இருந்த ஓர் தேவாலயத்திற்குள் வரச்சொல்லி அழைத்துச் சென்றார். மரியாதையினால் அவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அல்பொன்ஸ் ஆலயத்திற்குச் சென்றார். அவரை ஆலயத்தில் விட்டு விட்டுத் தன் நண்பர் ஒருவரின் மரணச் சடங்கை ஒழுங்கு செய்வதற்காக அருகில் இருந்த மடாலயத்திற்குச் சென்றார். புனித மைக்கல் ஆர்க் ஏஞ்சலின் ஆலயத்தில் தனித்து விடப்பட்ட அல்பொன்ஸிற்கு ஒரு அதிசயம் நடந்தது. அவரின் முன் ஓர் ஒளிப் பந்து தோன்றிப் பின் ஆயிரக்கணக்கான ஒளிப்பிழம்புகளாகச் சிதறி, அவருடைய மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரின் மனதில் இருந்த ஆசாபாசங்கள் நீங்கி, பரிசுத்த கன்னி மரியாளின் அன்பு, அவர் இதயத்தில் ஊடுருவியது. அத்தேவ ஒளியிலே சூரியக்கதிர்களால் சூழப்பட்டு அவ காட்சி கொடுத்தா. அவர் பின் வருமாறு கூறினார். "நான் நிமிர்ந்து பார்த்தபொழுது என்னைச் சுற்றியுள்ள கட்டிடம் மறைந்து, எனக்கு முன் ஓர் சிற்றாலயம் தெரிந்தது. எல்லா ஒளியையும் தன்னுள் அடக்கியதாகத் தெரிந்த அவ்வொளியின் மத்தியில், பீடத்தின் மேல் புனித கன்னி மரியாள், புதுமை வரவணிக்கத்தில் இருப்பது போலக் காட்சி தந்தார். தவிர்க்க முடியாத ஓர் சக்தியினால் நான் அவரிடம் கவரப்பட்டேன். அவ ஒன்றும் பேசாவிடினும் என்னால் உணரக்கூடியதாக இருந்தது. அவவின் கைகள் என்மேல் காட்டிய இரக்கத்தையும், தளராத் தன்மையையும் வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை. எமது தாயாரின் திருக்கரங்களில் இருந்து, கருணை, இரக்கம், மோட்சத்தின் செல்வம் அனைத்தும், மரியாளின் பாதுகாவலில் உள்ள அனைவர் மேலும் சொரிந்தது." அவ்விடத்திற்குத் திரும்பி வந்த பிரபு, நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்த அல்பொன்சைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார். உயர் அரச அதிகாரிகளுடன் பங்குபெற இருந்த விருந்தை இரத்துச் செய்து விட்டுத் தானும் அவரருகில் முழங்காலில் இருந்து செபித்தார். அதன் பின்னர் பாப்பரசர் 16ம் கிறெகறியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார். அங்கு சென்றபொழுது பாப்பரசரிடமிருந்து அரும்பொருட்களில் மர்தாவின் மாசில்லா உற்பவத்தின் ஓவியத்தில் புதுமை மாதாவின் அடையாளம் இருந்ததைக் கண்ட அல்பொன்ஸ் பரவசம் அடைந்தார். தன்னையறியாமல் பெருமூச் செறிந்து பின்வருமாறு கூறினார். "வானுலகில் உள்ள எமது மாதாவின் அழகை மனித முயற்சியினால் ஓவியமாகக் கைப்பற்ற முடியாது, அவவின் மனித நேயமானது உலகிற்கு அப்பாற்பட்டது. அவர் தனது பிள்ளைகளைத் தனது அன்பினால் கவர்ந்து விடுகின்றார்." மனமாற்றமடைந்த அல்பொன்ஸ் தனது புதிய விசுவாசத்தினால் தூண்டப்பெற்ற பரிசுத்த இடமாகிய ஜெருசலத்திற்கு யாத்திரை சென்றார். அங்கு இருந்த 'எக்கே கோமோ' எனும் புராதன வளைவின் அருகில் இருந்த நிலத்தை விலைக்கு வாங்கினார். குருவானவராக மாறிய அவர் சியோன் தேவதாயாரின் சபையை ஆரம்பித்தார். **(Congregation of Our Lady of Zion)**1859-1864க்குமிடையில் புதைபொருளாராய்ச்சியாளர்கள், போஞ்சியு பிலாத்துவின்முன் யேசு விசாரணை செய்யப்பட்ட இடத்தில் இருந்த இடிபாடுகளை, சியோன் கன்னியர்களின் மடத்தை அமைப்பதற்காக அகற்றுவித்தார். மரண தண்டனை விதிக்கப்பட்டு யேசு, இவ்விடத்தில் இருந்து தன் சிலுவையைச் சுமந்து சென்றார். அவ்விடத்தில் அகழ்வுகள் நடத்திய அல்பொன்ஸ் கண்டுபிடித்த சிதைவுகளில் உரோமப்போர் வீரர் விளையாடும் விளையாட்டின் வரைவுகள் உள்ள நடைபாதை காணப்பட்டது. 'அரசனின் விளையாட்டு' என அழைக்கப்பட்ட அவ் விளையாட்டில் பகடைக்காய்களை உருட்டி விளையாடுவர். அந்நேரம் யேசுவையே பகடையாக வைத்து அவர்கள் விளையாடியிருக்கலாம் (மத்தேயு27:27-30, மாற்கு 15:16-20இல் கூறியுள்ளபடி) உரோமப்போர்வீரர்கள் ஒரு கைதியைத் தெரிவுசெய்து அவனை அரசனென கேலிசெய்த பின்னர் மரணதண்டனை கொடுப்பது வழக்கம். அல்பொன்ஸ் பரிசுத்தப் பிரதேசத்தில் நடத்திய அகழ்வுகள், அங்கு நடத்தப்பட்ட பல அகழ்வுகளிலும் மிகவும் சுவாரஸ்யமான அகழ்வு எனக் கருதப்படுகின்றது. தேவதாயாரின் காட்சியைக் கண்டு 40 வருடங்களின் பின்னர் அவர் ஜெருசலேத்தில் மரணமடைந்தார். அவரது மரண நேரத்தில் அருகில் இருந்தவர்கள், அவரது இறுதி நேரத்தில் தேவதாயாரின் தரிசனத்தைக் கண்டு பரவசமாகவே அவர் உயிர் பிரிந்தது என்றனர். அதனை கண்ணுற்ற பலர் புதிதாகத் தேவதாயின் மேல் பக்தியும் நம்பிக்கையும் வைத்தனர்.

# மீட்பின் சுவடுகள்

**சூரிய நிலா**
**ஈச்சமோட்டை**

## 9 தாலாட்டுப் பாடுவோம்!

யூதர் குல அற்புதமே
யுகங்களெல்லாம் உன் வசமே
ஆண்டவனின் திருமகனே
ஆளவந்தாய் எங்களையே
மனித குலம் காப்பதற்கு
மருத்துவனாய் மலர்ந்தவனே
பாலைவன வாழ்வினையே
பசுமையாக மாற்றிடுவாய்
இஸ்ராயேலை கைதூக்கி
இறை அருளால் வாழவைப்பாய்
தாலேலோ! தாலேலோ!

இறைவாக்கின் வெற்றியதை
இறைமகனே நீயே தந்தாய்
படுகுழியில் வீழ்ந்த எம்மை
பாலகனே மீட்க வந்தாய்
செல்வமெலாம் உதறிவிட்டு
செம்மையாக தொழுவமதில்
நல்விதையாய் வந்து நின்றாய்
தாலேலோ! தாலேலோ!

தச்சனுக்கு குழந்தையாகி
தாயுனக்குக் கன்னியாகி
இச்சனங்கள் மீட்க வந்தாய்
மாரிகால மழைத்துளிபோல்
மனங்களிலே குளிரைத் தந்து
மனுக்குலத்தை வாழவைக்க
மாபரனே நீயுதித்தாய்
ஏழ்மையினை செல்வமாக்கி
தாழ்மையினை புகழுமாக்கி
வீழுகின்ற மனிதருக்கு
விடிவினையே காட்டவந்தாய்
தாலேலோ! தாலேலோ!

கைவிடப் பட்டோரை
காப்பதுவும் உன்னருளே
மைவிழி கரைந் தொழுகும்
தையல் வாழ்வை ஏற்றிடுவாய்
தொழுவமதில் பிறந்த உன்
தொழுது நாமும் நிற்கும் போது
பழுதுபடா பசுமை அன்பை
பாமரர்கள் எமக்களித்தாய்
நம்பிக்கை நாயகனே
நம்மையெலாம் காப்பவனே
இன்பத்தின் திருவிளக்கே
இயல்புடன் நீ தூங்கிடையா
இன் முகத்தை அணைத்[illegible]
தாலேலோ! தாலேலோ!

## கீழ்த்திசை ஞானிகள் கண்டனர் 10

வான் விளக்காய்
விண்மீனது தோன்றி
ஞானிகட்கு வழியைக் காட்ட
கீழ்த்திசையில் பிறந்த இறைவன்
தாழ்ப் பணிந்து தலை வணங்க
தம் பயணம் தொடர்ந்தனரே!

முப்பெரும் ஞானிகளும்
மூண்டனரே ஒரே வழியில்
உட்பொருளாம் இறைமகனை
உவப்புடனே பார்ப்பதற்கு
சென்று கொண்டிருந்த போது
நின்றதுவே வான் விளக்கு
எருசலேமாம் நகர் நடுவே!

ஞானிகளும் நகரையண்டி
நாட்டரசன் ஏரோதிடம்
கேட்டனரே வழியதனை!

"எருசலேமின் எழில் மன்னா
யூதர்களின் யுக புருஷர்
எங்கு வந்து அவதரித்தார்
நீருமதைத் தெரிவித்தால்
நிறைவுடனே கூறுவீரோ
[illegible]
திருவடிகள் கண்டவுடன்"
என்றனர்
செய்தி கேட்ட ஏரோதரசன்
செய்வதறியாக் கலங்கி நின்று
வேதமோதும் விர்பனர் சபையதை
விரைந்தே கூட்டியங்கு
ஏதென வினவினான்
உண்மை இதுதான் உணர்ந்திடுமென்று
வேத விற்பனர் விளக்கம் கூறினர்
"யூதர் மன்னர் யூதேயா நாட்டில்
பெத்லெகேமதில் பிறப்பான்" என்று
முன்னைய நாளில்
ஞானிகள் பலரும் இறைவாக்குரைத்தனர்
என்று நவின்றனர்
ஏங்கிய மன்னன் ஏரோது
எதையும் வெளியில் காட்டிடாது
தூங்கிய மூளையைத் துலக்கியபடியே
"நானுமந்த நாகனவரை
காணும் பாக்கியம் கிடைத்தால் நன்று"
என்று நடித்து
விளக்கது காட்டும்
திண்ணிய வெளிச்சம்
உம் திரு விழிக்கே தென்படுமெனவே
நீரும் சென்று சேர்ந்தங்கு
கண்டதை எமக்கும்
காட்டிட வேண்டும் என்றே கேட்டான்

நன்றி கூறிய ஞானிகள் உடனே
நாயகன் இடத்தைக் காண்பதற்குடனே
விண்மீன் காட்டும் வழியினிலே
விரைந்தே பயணம் செய்கையிலே
விண்மீன் நின்ற இடத்தை நோக்க
விளைந்த பெருஞ் செல்வமாக
மழலை இயேசு மண்ணினிலே
மலர்ந்திருக்கும் மாண்பினையே
மாட்டுத் தொழுவ மடியில் கண்டு
மண்டியிட்டு வணங்கிப் பணிந்தனர்.


கனவினில் ஒரு குரல் கச்சிதமாய்
"இனிநீர் மன்னவன் ஏரோதிடம்
ஏகுதல் அவிது நன்றன்று
எழுந்து நேரே உமது நாட்டிற்கு
ஏவுதலே நன்று" என்று உரைத்ததுவே
பொன்னும் தூபமும்
வெள்ளைப் பவளமும்
பின்னும் இறைமகன் பாதத்தடியில்
மிகுந்த அன்புடன் காணிக்கையாக்கி
சிரமே தாழ்த்தி மீண்டும் வணங்கி
சிறபுடன் தமது நாடேகினதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் உயிர்ப்பில் நிறைவாகும் மனித ஏக்கங்கள்

அருள்திரு அ.பி. யெயசேகரம்

உயிர்ப்பு என்பது இறப்பின் பின் இடம்பெறும் நிகழ்வு மட்டும் தான் என்று எண்ணுகின்றனர். உயிர்ப்பை எதிர்காலத்தில் உலக முடிவில்தான் எதிர்நோக்குகின்றனர். உயிர்ப்பு என்ற சொல்லே உடல் மீண்டும் உயிர் பெற்றெழச் செய்கிறதாக ஒரு படிமம். இறப்புக்குப்பின் பிரிந்த உயிர் ஒன்று சேர்வதே உயிர்ப்பு என்ற கிறிஸ்தவ வெகுஜன கருத்தியலாக உள்ளது. உயிர்ப்பிற்கும் இன்



றைய வாழ்விற்கும் தொடர்பு உண்டு. இத்தொடர்பை உய்த்துணரல், அனுபவித்தல், ஆழமாக்குதல் கிறிஸ்தவ இன்றைய இறையியல் சவாலாக உள்ளது. "அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு இவரே. முழு நிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார். சிலுவையில் சிந்திய இரத்தத்தால் சமாதானம் உண்டாக்கி விண்ணிலும், மண்ணிலும் யாவற்றையும் அவர் வழியாக தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்"(கொலோ1:18-20).

உயிர்ப்பு - வாழ்வு உறவில் மறுவாழ்வு, நிலைவாழ்வுசார் வேதாகமச் சிந்தனைகள், யூதரின் மறைஎதிர்நோக்குகள் எவ்விதமாக உயிர்ப்புக் கருவை ஊடுருவி இருக்கின்றது என்ற பார்வை தேவையாகிறது. இஸ்ராயேல் வரலாற்றில் எதிர்நோக்கு வேறுபட்ட பல வடிவங்களை கொண்டுள்ளது. அதிலொன்று தாவீது மெசியாக் கொள்ளை (**Davidic Messianism**). இது கி.பி 8ம் நூற்றாண்டு இறைவாக்கினர்கள் ஆமோஸ், எசாயா, மிக்கேயா, ஒசெயாவின் இலக்கியங்களில் முன்னுரிமை பெற்றுள்ளது. இறைவன் வாக்குப்பண்ணும் இஸ்ராயேல் மக்களின் விடுதலை தாவீதின் வழிமரபில் உதித்த முன்னுதாரண அரசர் மூலமாகவே கிடைக்கும், அவர் வழி உலகில் நீதி அமைதி நீண்ட ஆயுள், வளமான வாழ்வு (தொ.நூ. 3:17-28: 1-16) "நாடு" என்ற குறிப்பெயரில் முழு நிறைவை அடையும். புராணச் சிந்தனையில் தாவீதின் அரசு நிலையான அரசு என்ற வடிவமும் பெற்றுள்ளது (எசாயா 11:1-9). மெசியா ஒரு புராணக் காவியனாக படைப்பின் தொடக்கத்தில் அனைத்தையும் ஆண்டு நடத்திய தொடக்க மனிதனாக உயர்த்தப்படுகின்றார் (மிக்கேயா 5:2-3, எசாயா 11:6-9). அவர்கள் எகிப்தில் இருந்து சொந்த நாட்டிற்கு அடைந்ததும் பாலையில் பசியில் இருந்து காப்பாற்றப்பட்டதும் முழு விடுதலையின் முன் அடையாளமாக காணப்படுகின்றது. அது சுதந்திரம், சமாதானம், உலகசார் நிறைவை நோக்கியதாக அமைந்தது. யெருசலேம் அழிவும், பபிலோனியாவிற்கு யூதர்கள் அடிமைகளாக கி.பி 587ல் எடுத்துச் செல்லப்பட்டதும் யூதர்களின் எதிர்நோக்குகளை சுக்குநூறாக்கியது. கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும், பசுமையான எதிர்நோக்குகளுக்கும் அவர்கள் சந்தித்த அடக்குமுறை, அன்னிய ஆதிக்கம், சுரண்டல், துன்பியல் வாழ்வு முரண்பாடாகியது. தெற்கு அரசை ஆட்சிசெய்த தாவீதின் அரசு வரலாற்றின் பக்கங்களில் இருந்து மறைந்துவிட, மக்கள் விடுவிக்கப்படுவர் என்ற காலங்காலமான எதிர்பார்ப்புகள் களைப்புத்தட்ட, கருத்தியலில் உடைவு ஏற்பட தம்மை விடுவிக்கும் அரசன் இறைவன் என்றும் அவரது இறுதி வருகையை எதிர்நோக்கத் தொடங்கினர். பபிலோனிய பேர்சிய நாடுகளில் அடிமைச் சேவகம் அப்பண்பாடுகளின் தாக்கத்தினால் இவர்கள் பிறிதொரு எதிர்நோக்குடன் சொந்த நாட்டிற்கு திரும்பினர். அதுதான் முடிவுகால எதிர்நோக்கு (**Apocalyptic hope**).

முடிவுகால எதிர்நோக்கு என்பது எதிர்பாரதவிதமாய் கணப்பொழுதில் இறைவன் தலையீட்டில் தீமை அரசோச்சிய காலத்தையும் உலகையும் அழித்து புதிய வானத்தையும், புதிய பூமியையும் அருளல். "மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்பகாலம் வரும்" (டானியேல் 12:1-3) வாழ்வின் துயரங்கள், துன்பங்கள், நோய்கள் முற்றுப்பெறும். முடிவுகால எதிர்நோக்கு மெசியாவின் எதிர்நோக்கைக்கடந்து இறுதிக்கால எதிர்பார்ப்பாக மாற்றமடைந்து உள்ளது. மீட்பு வரலாற்றை நிறைவு செய்யும் நிகழ்வாய் இல்லாமல் அதன் இறுதி முடிவாய் மாறும் நிகழ்வாக எதிர்பார்க்கப்படுகிறது. இவ் எதிர்நோக்குகளை முன் உதாரணமாக கொள்ளாமல் அக்கால மக்களின் வாழ்விட ஆதங்கங்கள், சிக்கல்கள், தாகிப்புகள், வேட்கைகள், வளமான வாழ்விற்கான எதிர்பார்ப்புகள் என்று கொள்ளவேண்டும். யூதரின் எதிர்நோக்கில் மெசியாவின் காலம், சுபீட்ச காலம், விடுதலையின் காலம், என்ற படிவளர்ச்சிகளுண்டு. இப் பின்புலத்தில் இயேசுவின் உயிர்ப்பை புரிந்துகொள்வது முக்கியமாகின்றது.

உயிர்ப்பு அனைவருக்கும் எதிர்நோக்கை கொடுக்கின்றது. எதிர்நோக்கற்ற மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது (1தெச. 4:13). கிறிஸ்து உயிர்ப்பு பற்றி முழங்கிய பொழுது யூதர்கள் தாம் மரபுவழி கொண்ட எதிர்நோக்குடன் அணுகத் தொடங்கினர். இயேசுவின் உயிர்ப்பு அவர்கள் பார்வையை முற்றுமுழுதாக மாற்றுகிறது. மெசியா சுபீட்சம், வளமான வாழ்வு அருள்வார் என்பதும், வாழ்வியல் போராட்டங்களிலிருந்து தம்மை விடுவிக்க தமக்கு அப்பாற்பட்ட சக்தி உண்டென்றும், மெசியா வந்து அவைகளை தீர்த்துவிடுவார் என்பதும் மெசியாக் கொள்கை. இது போராட்ட வாழ்வின் யதார்த்தங்களை மழுங்கடிக்கிறது. பொறுப்புகளிலிருந்து நழுவ, முயற்சிகளில் இருந்து விடுபட இது உந்தல் ஆகிறது. வேறு ஒருத்தர் அப்பொறுப்புகளை ஏற்று தம்மை விடுவிப்பார் என்ற கருத்தியலை இயேசுவின் உயிர்ப்பு முற்றுமுழுதாக உடைக்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பில் எதிர்நோக்கு சிந்தனைகள் புதிய பரிமாணத்தை பெறுகின்றது. "மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்" என்று சொன்னார். பின்பு அவர் அவர் அனைவரையும் நோக்கி, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என் பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்" (லூக். 9:22-24).

## மெசியாக் கொள்கை - ஈடுபாடற்ற எதிர்நோக்கு

மெசியாக்கால எதிர்நோக்குகள் வெறும் கனவாக, எட்டப்படாததொன்றாக மருவியதற்கு ஈடுபாடற்ற எதிர்நோக்கே காரணம். விடுதலைக்கு வழி ஒரு சக்திமிக்க மந்திரக்கோலல்ல. ஈடுபாட்டு எதிர்நோக்குடையவர்கள் முழுவிடுதலைக்குழைப்பவர்கள், இவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பின் சக்தியை உள்வாங்கியவர்கள், இவர்களுள் கடவுள் தன்சொந்த உடலைப் போல செயலாற்றுகிறார். யூத மக்களின் விடிவுநோக்கிய எதிர்நோக்கினை மழுங்கடிக்கப்பட்டதிற்கு அவர்கள் கொண்ட எதிர்நோக்கில் பூரண ஈடுபாடின்மை. அவர்களுக்குள் பிளவுகள், பிரிவினைகள். விடுதலைப் பயணம் ஒரு முணுமுணுத்த பயணம். எகிப்தின் அடிமை வாழ்வின் பாதுகாப்பு, சுகபோகங்களை நினைத்து புலம்பிய பயணம் அது (விப. 14). ஈழத்தமிழரின் உரிமை போராட்டம் நெடிய பயணமாவதற்கு தமது உரிமை வாழ்வில் ஈடுபாடற்றதன்மையே. தமிழ் ஈழம் என்ற எதிர்நோக்கிற்கு, அடிப்படை உரிமை வாழ்விற்கு அனைவரும் ஒரு சக்தியாக அணிதிரள வேண்டும். நீதியின் போராட்டத்தில்



வீழுபவர்களின் சாவின் நோக்கமென்ன? மனித இதயத்திலிருந்து தவிர்க்கமுடியாத இக்கேள்விகளுக்கு இயேசுவின் உயிர்ப்பு விடைபகிரும். கிறிஸ்து ஒவ்வொரு முறையும் உயிர்ப்பை முன்னறிவித்த பொழுது தன்னலம் துறக்க வேண்டுமென்றார். தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மனித நிறைவுக்கான ஏக்கம் இறுதியில் ஏமாற்றம் அடையாது என்பது கிறிஸ்துவின் உயிர்ப்பு தெளிவாக்குகின்றது.

கிறிஸ்துவின் உயிர்ப்பு முழு விடுதலை நோக்கி நகர்கின்றது. மெசியாவின் காலம் அனைத்தும் ஒரு குறுகிய விடிவு நோக்கியதாக இருந்தது. தமது அதிகார பராக்கிரமத்தை திணிப்பதுதான் அவர்களுக்கான விடுதலை நோக்காகியது. தாவீது மெசியாவின் காலம் அரசியல் அதிகாரம் நிறைந்ததாக இருக்க விரும்பினர். யூத தேசியவாதிகள் இறைவனுக்காக புனித யுத்தம் புரிந்து விடுதலை கொணர தயாராகியவர்கள். அறநெறியின் அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டு அதை இறுக்கமாக பின்பற்றுவதனில் விடிவு கிட்டும் என்று நம்புகிறவர்கள் பரிசேயர். இயற்கை அழிவுகள் வழி இறைவன் தலையிட்டு விடுவிப்பார் என்பது உலக முடிவு கால சிந்தனையர். இவைகள் அனைத்தும் கிறிஸ்துவினால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று (மத் 4:1-11). தனது பாடுகள் உயிர்ப்பினால் வேறுபட்ட மீட்பின் காலத்தை எதிர்நோக்க வேண்டும் என்று கிறிஸ்து கற்பிக்கின்றார். அதிகார பராக்கிரமத்தினால் முழு விடுதலை பெற முடியாது. அதிகாரம் அநீதியான அமைப்பை உருவாக்குகின்றது. விடிவிற்கு வலுவானது அன்பு. இதைத்தான் தனது அரசிற்கு முழங்குகிறார் இயேசு. பழைய ஏற்பாடு தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு எதிர்நோக்கு நூல். ஆனால் புதிய ஏற்பாடு அன்பில் முகிழ்ந்த அமரகாவியம்.



## முடிவுகால எதிர்நோக்கு - அச்ச உணர்வு

அடுத்ததாக முடிவுகால எதிர்நோக்கு கோட்பாடும் கிறிஸ்துவின் உயிர்ப்பில் ஆட்டங்காணுகிறது. வாழ்வின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட மனிதன், ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு தனது நிம்மதியான விடிவுற்கு இறப்பிலும் இயற்கை அழிவிலும் உலக முடிவிற்கும் தஞ்சம் புகுவதை இவ் எதிர்நோக்கு நியாயப்படுத்துகிறது. இது மனிதனை விரக்தி நிலைக்கு தள்ளுகிறது. மனிதனின் வளமான ஏக்கங்களையும் நியாய தேடல்களுக்கும் இது வேட்டுவைக்கிறது. வேரேட்டத் தீர்வுகளுக்குப் பதிலாக இது மேலோட்டக் கருவை முன்வைக்கிறது. அழிவுகள், பயங்கர நிகழ்வுகளை முனைப்பிற்கு கொணர்ந்து மனிதனை நெறிப்படுத்த முனைகிறது, பயத்தை ஊட்டி மனிதனைக் கோழையாக்கிறது. கிறிஸ்து இறைவனை அன்பு செய்யும் இறைத் தந்தையாக காண்பிக்கிறார். நடக்கவிருக்கும் இறுதிக்கால நிகழ்வுகளை பயங்கர நிகழ்வாக வெளிப்படுத்தி, மனதில் அச்சத்தை உருவாக்கி, மக்களை நெறிப்படுத்த முனைதல் கிறிஸ்துவின் நற்செய்தி முழக்கத்திற்கும் முரண். மக்களை சபையில் சேர்ப்பதற்கும் ஆலயங்களில் வரவை அதிகரிப்பதற்கும், அதீத அச்ச உணர்வு ஊட்டப்படும் சமூகம் கனம் குறைந்த, நோயுற்ற, யதார்த்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாத சமூகமாக மாறுகிறது. தவறான இறை யியல் செய்முறை கிறிஸ்தவ வாழ்விற்கே தடுமாற்றம் விளைவிக்கலாம்!

சமாதானத்திற்கான நோபல் பரிசை 1991இல் பெற்ற பர்மா நாட்டு விடுதலை வீரர் ஒளங்கன் சூகி எழுதுகிறார் ஒரு மனிதனுக்கோ ஒரு நாட்டுக்கோ இருக்கக்கூடிய பேறு அச்சமின்மை. மனித உரிமைகள் உயிர்த்துடிப்புடன் இருப்பதை மறுக்கும் ஒரு சமுதாயக் கட்டுக்கோப்பின் அடித்தளத்தையே ஆட்டங்காணவைக்க அதற்கு சவால் விட தேவையானது அச்சமின்மை (துணிவு). மகாத்மா காந்தி அவர்கள் சாதித்த மாபெருஞ் சாதனைகளிலொன்று, அவர் இந்திய மக்களின் நெஞ்சில் துணிவை நிலை நாட்டியது என்றார் நேரு. ஒருத்தர் கெட்டொழிந்து போவதற்கு காரணம் அதிகாரம் அல்ல அச்சமே காரணம். அதிகாரத்தை ஏகபோகமாக்கி மக்களை அச்சுறுத்தி அரசாள்பவர்கள், எங்கே அந்த அதிகார அரக்கன் தம்மைவிட்டு போய்விடுவானோ என்று அஞ்சிக் கெடுகிறார்கள்.

கடந்த யனவரி மாத இறுதியில் யாழ். குடாநாட்டில் மீன்பிடி வலயக்கட்டுப்பாட்டை தளர்த்த மீனவர்கள் அணிதிரண்டார்கள், தொழில்புரியும் அடிப்படை உரிமைகோரி வீதிக்கு வந்தார்கள். அரச இராணுவ இயந்திர பராக்கிரமத்தை எதிர்த்து சாத்விகவழி போராட அச்சமின்மை அவர்களுக்குக் கைகொடுத்தது, ஓரளவு வெற்றியும் கண்டார்கள். இது அவர்களது அன்றாட வாழ்வியல் சவால், அவர்கள் அடிநாத ஏக்கம். மனித நிறைவுக்கான ஏக்கம் இறுதியில் வெற்றிகொள்ளும். கிறிஸ்துவின் உயிர்ப்பு அதைத் தெளிவாக்குகிறது.

தொடர்ந்து வாழவேண்டுமென்று ஏங்கும்போது நாம் ஏன் சாகவேண்டும்? நீதியின் போராட்டத்தில் விழுபவர்களின் சாவின் நோக்கமென்ன? மனித இதயத்திலிருந்து தவிர்க்க முடியாத இக்கேள்விகளுக்கு இயேசுவின் உயிர்ப்பு விடைபகரும். மானிடர் இறப்பிற்காக பிறப்பதில்லை, உயிர்ப்பிக்கபடுவதற்காக இறப்பார்கள். கிறிஸ்து இயேசு இவ்வுண்மையை ஆணித்தரமாக உறுதிசெய்கிறார். உயிர்ப்பு இறையரசை தெளிவாக நியாயப்படுத்துகிறது. இறையரசின் யதார்த்தத்தை நிறைவு செய்வதாக உயிர்ப்பு முகிழ்கிறது.

உயிர்ப்பு நீண்டகாலங்களுக்கு முன்னே ஒரு பழைய நிகழ்வல்ல, புதிய வானத்தினதும், புதிய பூமியினதும் தொடர்புகளை காட்டும் ஒன்று. உயிர்த்த இயேசுவின் ஆளுகையில் மானிடமும், பிரபஞ்சமும் வெற்றியடைய அழைக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். உயிர்ப்பு எம்மிடம் இருந்து புறத்தே எதிர்பார்க்கப்பட்டது. காலம் காலமாக ஒரு புறச்சூழலினால் அது உருவாக்கப்பட்டது என்ற கருத்தியலை கிறிஸ்துவின் உயிர்ப்பு மாற்றுகிறது. அவ் உயிர்ப்புச் சக்தி எம்மிடமே உள்ளதென்று அனுபவித்து காட்டிச் சென்றிருக்கின்றார். எங்கெங்கும் உலகில் உண்மையான மானிட வாழ்வு தழைக்குமோ, மனிதன் தன் சமூக வாழ்வில் ஒன்றாக சேர்ந்து சகோதரத்துவமான இணைப்பை உருவாக்கலாமோ அங்கே உயிர்ப்பு தொடர்பு நிகழ்வாக மாற்றப்படுகின்றது. ஆண்டவனின் இறுதி வருகைமட்டும் இவ் உயிர்ப்பு தொடரும். நீதியிலும், உண்மையிலும் நம்பிக்கை கொள்பவர்கள் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்கிறவர்கள், உயிர்ப்பில் நம்பிக்கை கொள்பவர்கள் நீதியிலும், உண்மையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்கள் துயரத்தில் வாழவேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் இறுதி ஏழு வார்த்தைகள்

# The seven last words of Jesus Christ

**கடைசி வேளையில் பேசும் வார்த்தைகள் செய்யும் செய்கைகள் எல்லாம் எவ்வளவு மதிப்புக்குரியவை பெறுமதியானவை.**

எமது அன்புக்குரியவர் ஒருவர் மாற்றலாகிப் போகிறார் அல்லது தூரப் பிரயாணம் போகிறார் என்றால் அவர்களோடு உறவுகொள்ளும் கடைசி நாட்கள், மணித்துளிகள், சந்திப்புக்கள் எல்லாம் பாசப்பதிவுகளாகவே எம்மிதயத்தில் இடம்பிடிக்கும். கடைசி வேளையில் பேசும் வார்த்தைகள் செய்யும் செய்கைகள் எல்லாம் எவ்வளவு மதிப்புக்குரியவை பெறுமதியானவை என்பதை நாம் நன்கறிவோம்.

இதனிலும் பார்க்க எமக்குத் தெரிந்த, நன்கு அறிந்த, அதிலும் மிகவும் அன்போடு உறவாடிய ஒருவர் மரணித்துவிட்டால் அவர் இறுதியாகப் பேசிய விடயங்கள் சொன்ன சொற்கள் உச்சரித்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் உணர்வு பூர்வமாக உள்ளத்தை தொடுகின்றவையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வார்த்தைகளின் நிழலிலேயே பலர் தமது காலத்தைக் கழிப்பதை நாம் நாம் காண்கிறோம்.

**பெரிய வெள்ளி ஆராதனையில் இந்த ஏழு வார்த்தைகளைத் தியானிப்பது வழிபாட்டின் மிக முக்கிய அம்சமாக அமைகிறது. இதில் கோடிட்டுக் காட்டப்படவேண்டிய விடயம் என்னவென்றால் இந்த ஏழு வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டிலேயே அதிலும் நான்கு நற்செய்திகளிலுமே காணப்படுவதாகும்.**

இறைமகன் இயேசு எமது அன்புக்குரியவர். மிகவும் அன்புக்குரியவர். இவ்வன்புக்குரியவரின் மரணத்திற்கு முன், சிலுவையில் உச்சரித்த கடைசி வார்த்தைகள் எவ்வளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நாம் நன்குணர்கிறோம். இயேசுவின் இந்தக் கடைசி ஏழு வார்த்தைகளும் எமது கிறிஸ்தவ பாரம்பரியத்தில் மிக முக்கிய இடம்பெறுகின்றன. குறிப்பாக பெரிய வெள்ளி ஆராதனையில் இந்த ஏழு வார்த்தைகளைத் தியானிப்பது வழிபாட்டின் மிக முக்கிய அம்சமாக அமைகிறது. இதில் கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய வீடயம் என்னவென்றால் இந்த ஏழு வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டிலேயே அதிலும் நான்கு நற்செய்திகளிலுமே காணப்படுவதாகும்.

இருப்பினும் இவ்வேழு வார்த்தைகளும் ஒரே நற்செய்தியில் காணமுடியாது. மாற்கு, மத்தேயு இருவரும் ஒருமித்த ஒரே ஒரு வார்த்தையை குறிப்பிடுகிறார்கள். லூக்கா வேறு மூன்று வார்த்தைகளைத் தருகிறார். யோவான் தமது நற்செய்திக்கே உரித்தான தனித்துவமான மூன்று வார்த்தைகளைக் கூறுகின்றார். இவ் வார்த்தைகளின் ஒளியிலே எம் வாழ்வைச் சிந்தித்து அவர் வழியில் எம்மைக் காண்போம்.

## என் இறைவா
## என் இறைவா
## ஏன் என்னைக் கைவிட்டீர்?

(மாற். 15:34, மத். 27:46)

இவ்வார்த்தைகளை திருப்பாடல் 22இலும் காணலாம். இத்திருப்பாடலில் சொல்லப்படுவது போல இறைவனில் ஆழமான நம்பிக்கையுள்ள ஒருவன் அநீதமுறையிலே தன் பகைவரால் துன்புறுத்தப்படுகின்றான். நண்பர் கைவிட்டு விட இவன் பகைவர் சூழ்ந்து கொள்கின்றனர். உடலாலும் உள்ளத்தாலும் வேதனையுறுகின்றான். இந்நிலையில் இந்த மனிதன் கடவுளை நோக்கிக் கதறி, கண்ணீர் வடிக்கிறான். "என் கடவுளே, என் கடவுளே, நீருமா என்னைக் கைவிட்டு விட்டீர் . . .!

திருப்பாடலில் வருகின்ற இம்மனிதனின் நிலையைத்தான் இயேசுவும் அனுபவிக்கிறார். பாவமறியாதவர். பரிசுத்தர். நல்லதையே சிந்தித்து நன்மையே புரிந்தவர். இப்போ ஒரு துரோகி எனத் தூற்றப்பட்டு, வானத்திற்கும், பூமிக்குமிடையே தொங்குகிறார். ஆறுதல் கொடுக்காவிட்டாலும், குறைந்தபட்சம் "பாவம்" என்று பரிதாபப்படுவதற்குக் கூட அவர்கள் எண்ணவில்லை. மிகவும் நெருக்கமாக உறவாடிய ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் கைவிட்டு விட்டார்கள். அன்போடு பழகிய அப்போஸ்தலர்களில் ஒருவர் மறுத்துவிட்டார். மற்றொருவர் ஏமாற்றிவிட்டார். மற்றவர்கள் மறைந்துவிட்டார்கள். இவர்கள்தான் கைவிட்டாலும் இறைத்தந்தையுமா என்னைக் கைவிட்டுவிடுவார்? என்ற ஏக்கத்தில் எழுந்த வார்த்தைகளாகக் கூட இருக்கலாம். இறைத்தந்தை உடன்பதில் கொடுக்காவிடினும், உலகே கேள்வியுறாத, வரலாறே கண்டிராத வகையில், உயிர்ப்பு என்ற விலைமதிக்கப் பெறாத விண்ணகக் கொடையை, மகிமையை மகனுக்கு வழங்குகிறார்.

இவ்வார்த்தைகள் இன்று எங்கள் அனுபவமில்லையா? இவை இன்றும் எதிரொலிக்கின்றன. வெளியே சிரித்தாலும், உள்ளே சிதைந்துபோய் இருக்கிறோம். கட்டிய கணவனை இழந்து தவிக்கும் மனைவியரின் சோகக் கதைகளும், பெற்ற பிள்ளையையே இழந்து துடிக்கும் தாய், தந்தையரின் கண்ணீரும், தந்தையின் முகம் தெரியாமல் வளரும் பாலகர்களின் ஏக்கமும், உற்ற உறவைப் பிரிந்து உருகிப்போகும் உள்ளங்களின் சோகங்களும், யாருடைய காதுகளாலும் கேட்கப்படாத சோகம்தோய்ந்த சம்பவங்களும், இயேசுவோடும் அவரின் வார்த்தைகளோடும் எம்மையும் இணைக்கின்றன அல்லவா!. . .

எமது அழுகுரல்களுக்கும் தந்தையாகிய இறைவன் செவிசாய்ப்பார் என்ற நம்பிக்கையை இயேசுவின் வார்த்தைகள் எமக்கு எடுத்துச் சொல்கின்றன. எமது அழுகைகளை எல்லாம் ஆனந்தமாக மாற்றக்கூடியவர் அவரே. ஆண்டவரின் அருளுக்காகக் காத்திருப்போம்.

**கட்டிய கணவனை இழந்து தவிக்கும் மனைவியரின் சோகக் கதைகளும், பெற்ற பிள்ளையையே இழந்து துடிக்கும் தாய், தந்தையின் கண்ணீரும், தந்தையின் முகம் தெரியாமல் வளரும் பாலகர்களின் ஏக்கமும், உற்ற உறவைப் பிரிந்து உருகிப்போகும் உள்ளங்களின் சோகங்களும், யாருடைய காதுகளாலும் கேட்கப்படாத சோகம்தோய்ந்த சம்பவங்களும், இயேசுவோடும் அவரின் வார்த்தைகளோடும் எம்மையும் இணைக்கின்றன அல்லவா !**

## தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் இவர்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை

(லூக். 23 : 34)

மன்னிப்பதும் அதனை மறப்பதும் இலகுவானதொன்றல்ல. அதிலும் பகைவரை மன்னிப்பது என்பது மிகக் கடினமானது. இதிலும் வானத்துக்கும் பூமிக்கும் இடையே மூன்று ஆணிகளில் தொங்கிக்கொண்டு, துன்பத்தை அணுவணுவாக அனுபவித்துக்கொண்டு, "தந்தையே இவர்களை மன்னியும்..." என்று தந்தையிடம் மன்றாடி, மனதார மன்னிப்பது மனித கண்ணோட்டத்திலே இப்படியும் மன்னிக்க முடியுமா? என்ற வினா எழலாம். ஆனால், இது முடியுமென இயேசு வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஆம், இயேசு மனதார மன்னித்திராவிடின் மரணத்தை வென்றிருக்க முடியாது!...

இயேசுவின் பணிவாழ்வில் இயேசுவைத் தமது பகைவராகக் கொண்டவர்களோடு தம் உறவைக் கைவிடவில்லை. அவர்களுடைய அழைப்பையேற்று விருந்துண்ணச் செல்கிறார். அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்களோடு உரையாடத் தவறவில்லை. சந்திப்புக்களையும், உரையாடல்களையும் மனமாற்றத்தின் ஆரம்பக் கட்டங்களாக அமைத்துக்கொள்கிறார்.

***மன்னிப்பதும் அதனை மறப்பதும் இலகுவானதொன்றல்ல. அதிலும் பகைவரை மன்னிப்பது என்பது மிகக்கடினமானது.***

இம்முயற்சியில் நிக்கதேமு போன்றவர்கள் மனம் மாறினார்கள். ஆனால், பல தடவைகளில் இயேசுவை எதிர்த்தவர்கள் தமது கடினப்போக்கிலேயே வாழ்ந்து, தமக்குச் சவாலாய் இருந்த இவரைக் கைது செய்து, கலகக்காரன் பட்டியலிலே சேர்த்து கழுமரமேற்றிக் கொல்லுகிறார்கள்.

சிலவேளை கல்வாரியில் முடிந்த பலருடைய கதைகளுள் இதுவும் ஒன்றாகலாமென்று அவர்கள் நினைத்திருக்கலாம். அல்லது தங்கள் பரம விரோதியின் அத்தியாயம் சிலுவை மரணத்துடன் முடிந்துவிட்டது என்றும் கருதியிருக்கலாம். எது எப்படியிருப்பினும் அவர்கள் செய்வது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லைத்தான்!...

யாருக்காவது யாரும் பகைவர் என்றால் அவர்களை ஒழித்துக்கட்டுவதுதான் எமக்கு முதலில் தென்படுகின்ற, நன்கு தெரிந்த வழியாகலாம். இவ்வழியே இலகுவானதாகவும் தோன்றலாம் ஆனால், நிச்சயமாக கிறிஸ்தவ வழிமுறையாக இருக்காது. நாம் வாழுகின்ற இன்றைய சூழலில், எம் அன்புக்குரிய உறவுகளைப் பிரித்து, அறுத்து, சிதைத்து சொல்ல முடியாத துன்பங்களையும், ஆற்றமுடியாத வடுக்களையும் ஏற்படுத்த காரணங்களாக இருந்தவைகளையும், காரணிகளாய் இருந்தவர்களையும் மறந்தும் மன்னிக்க முடியாது, மன்னிக்கக் கூடாது என்ற மனநிலைதான் மேலோங்கி நிற்கிறது. மனதார மன்னித்தால்தான் மனுமகன் மாட்சிபெற்றார். மகிமையடைந்தார். கடவுளின் கருணையின் காலத்திற்காகக் காத்திருப்போம்.

**எம் அன்புக்குரிய உறவுகளைப் பிரித்து, அறுத்து, சிதைத்து சொல்லமுடியாத துன்பங்களையும் ஆற்றமுடியாத வடுக்களையும் ஏற்படுத்த காரணங்களாக இருந்தவைகளையும், காரணிகளாய் இருந்தவர்களையும் மறந்தும் மன்னிக்க முடியாது, மன்னிக்கக் கூடாது என்ற மனநிலைதான் மேலோங்கி நிற்கிறது.**

## இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்

(லூக். 23 : 43)

கல்வாரி மேட்டில், இரு கள்வர்களுக்கு இடையில் இயேசு சிலுவையில் அறையப்படுகிறார். மேலே வானம், கீழே பூமி. சிலுவையில் தொங்கும் காட்சி இத் துன்பகரமான மரணம் அரசுக்கு எதிராக புரட்சிசெய்யும் கலகக்காரர்களுக்குத் தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. இரு குற்றவாளிகளுள் ஒருவன் அரச காவலர்களோடு சேர்ந்து இயேசுவை பரிகசிக்கின்றான். மற்றவன் அவனைக் கடிந்துகொள்கிறான். தாம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது முறையானது, நீதியானது என்பதை ஏற்றுக் கொள்கின்றான். இவ்விறுதி வேளையில் இயேசுவின் இரக்கத்தை இறைஞ்சுகின்றான்.

நமது மன்றாட்டங்களுக்கும், தேவைகளுக்கும் இறைவன் காலம் தாழ்த்திப் பதிலளிக்கிறார் எனப் பலவேளைகளில் கூறியிருக்கிறோம். ஆனால், அவரின் கொடைகள் எந்தெந்த காலங்களில் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தந்தத் தருணங்களில் நிறைவேற்றுவதுதான் தந்தையின் சிறப்பு. இவ்வாறே இக்குற்றவாளியின் இறைவேண்டல், 'இன்றே' 'இப்போதே', 'இக்கணமே' என இறைமகனால் விடையளிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வார வழிபாடுகள் – ஒரு விளக்கம்

## முன்னுரை

**புனித வாரம் தவக்காலத்தின் உச்சகட்டம் ஆகும். திருவழிபாட்டு ஆண்டின் முக்கிய பகுதியாகிய தவக்காலத்தில் செபதபங்களினாலும் ஒறுத்தல் உபவாசங்களினாலும் தானதருமங்களினாலும் இப் பரிசுத்த வாரத்துக்கு ஆயத்தம் செய்தோம். இறைவனது அழைப்பையேற்று உண்மையான மனமாற்றத்துடனும் தூய உள்ளத்துடனும் பரிசுத்த வாரத்தில் பிரவேசிப்போம்.**

**பரிசுத்த வாரத்தில் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் மீட்பின் மறைபொருள்கள் திருச்சபையால் நினைவுகூறப்படுகின்றன. கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வின் இறுதிநாட்களில் அவரால் நிறைவேற்றப்பட்ட மெசியா அவர் ஜெருசலேமுக்குள் பவனி வந்தது முதல் மகிமையோடு உயிர்த்தெழுந்தது ஈறாகவுள்ள அனைத்து நிகழ்ச்சிகளும் திருச்சபையின் வழிபாட்டிலே நினைவு கூறப்படுகின்றது. பெரிய வியாழன் மாலைத் திருப்பலியுடன் பாஸ்கா விழாவின் திரிதின வழிபாடு ஆரம்பமாகின்றது.**

**இத் திருவழிபாடுகள் அர்த்தமற்ற வெறும் சடங்குகளாக இராமல், உயிரூட்டம் பெற்ற ஒரு நிகழ்வாக மாறவேண்டும்.**

## குருத்து ஞாயிறு

“**உன்னதங்களில் ஓசன்னா!**” என்ற முழக்கத்துடன் இயேசு வெற்றிவீரனாக ஜெருசலேம் நகரில் பிரவேசித்த இந்த நிகழ்ச்சி இன்று நினைவுகூறப்படுகிறது. கடைசிமுறையாக ஜெருசலேம் நகரில் பிரவேசிக்கும் இயேசு தமக்கு நேரப்போவதை அறிவார். ஆயினும் பிதாவின் சித்தம் இதுவே, அதை நான் நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியுடன் ஒரு கழுதைக் குட்டியின் மீதேறி, தம் சீடர் புடைசூழ பவனிவந்த இந் நிகழ்ச்சியால் “**அமைதியின் அரசர்**” என்று இசையாஸ் 300 ஆண்டுகளுக்கு முன் சொன்ன இறைவாக்கு நிறைவேறியது.




அமைதியின் அடையாளமாகவும் வெற்றியின் சின்னமாகவும் இருக்கும் ஒலிவ் மரக்கிளைகளை ஏந்தியவராய், வீதியில் தம் ஆடைகளை விரித்து “**தாவீதின் மகனுக்கு ஓசான்னா**” என அரச மரியாதையுடன் மக்கள் அவரை வரவேற்றனர். அன்று அவரை ஆரவாரத்துடன் வரவேற்ற மக்கள் சில நாட்களின் பின் அவரைச் சிலுவையில் அறைந்தபோது எங்கே போயினர்? நாம் அவர்களைப் போல் இருக்காது உள்ளத்தால் அவரை அரசராக ஏற்று உறுதியுடன் சான்று பகர்வோம்.

## திருச்சடங்குகள்

### 1. குருத்தோலை மந்திரித்தல்:

இது இந்நாளுக்குரிய விசேட சடங்காகும். மக்கள் ஆலயத்துக்கு வெளியே ஓரிடத்தில் கூடியிருக்க குருவானவர் குருத்தோலைகளை ஆசீர்வதிப்பார். இந்த ஓலைகள் பவனியிற் கொண்டுசெல்லப்படுவதுடன் பின்னர் வீட்டிலும் பயபக்தியாகப் பேணப்படும். குருத்தோலைகள் ஆசீர்வதிக்கப்பட்ட பின் இயேசுநாதர் ஜெருசலேம் நகரில் பவனிவந்த நிகழ்ச்சி நற்செய்தியிலிருந்து வாசிக்கப்படும். ஆண்டவரின் திருப்பாடுகளை நினைவுகூறும் வகையில் குரு செந்நிற திருவுடை அணிந்திருப்பார்.

வாசகம் முடிந்ததும் மக்களும் குருவானவரும் குருத்தோலைகளை ஏந்தியபடி பவனியாக கிறிஸ்து அரசரின் புகழ்பாடிக்கொண்டு ஆலயத்தில் நுழைவர்.

பீடத்தில் சிலுவை அடையாளமோ பச்சாதாபச் சடங்குகளோ இடம் பெறுவதில்லை. திருப்பலியின் ஏனைய செபங்கள் தொடரும்.

### 1.முதலாம் வாசகம்: (இசை. 50:4-7)

இயேசு துன்புறுத்துவோரிடம் கையளிக்கப்படுவதையும், அவர் தமது தந்தையின் சித்தத்துக்கமைய, பாடுகளை ஏற்றுத் துணிவுடன் செயல்படுவதையும் இசையாஸ் தமது இறைவாக்கு நூலில் கூறுகின்றார்.

### 2.இரண்டாம் வாசகம்: (பிலிப். 2:6-11)

பிலிப்பியருக்கு எழுதிய இந்நிருபத்தில் புனித பவுல் இயேசு கடவுள் தன்மையில் விளங்கினாலும், அடிமையின் தன்மை பூண்டு, சிலுவைச் சாவையே ஏற்குமளவுக்கு கீழ்ப்படிந்ததால் தந்தை அவரை மகிமைப்படுத்தினார் என்று கூறுகின்றார்.

### 3.மூன்றாம் வாசகம்:

திருப்பாடுகளின் வரலாறு இன்று மாற்கு நற்செய்தியிலிருந்து வாசிக்கப்படுகிறது. இது தூபம், மெழுகுவர்த்தி, வாழ்த்துரை இன்றி, சிலுவை அடையாளம் வரையாமல் வாசிக்கப்படும். இயேசு உயிர்பிரியும் சம்பவம் வாசிக்கப்பட்டதும் அனைவரும் முழந்தாளிட்டு சற்றுநேரம் மௌனமாயிருந்து வணக்கம் செலுத்துவர்.

தந்தையின் விருப்பத்திற்கிணங்கி உலக மீட்புக்காக இயேசு தம்மையே கையளிக்கிறார். குற்றவாளியெனக் கைதியாக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, வதைக்கப்பட்டு நம் பாவங்களுக்காகத் தம் உயிரையே கொடுக்கிறார். இதனால் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி, அதைத் தன் இரத்தத்தால் உறுதிப்படுத்தி புதிய இறைமக்களை உண்டாக்குகிறார்.



### திருத்தைலங்கள் மந்திரிக்கும் சடங்கு

இது வழக்கமாக பரிசுத்த வாரத்தின் திங்கட்கிழமையன்று மறைமாவட்டப் பேராலயங்களில் ஆயரின் தலைமையில் இடம்பெறுகிறது. இது குருத்துவத்தின் விழாவாகவும் இருக்கின்றது. குருக்கள் மறைமாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து வந்து ஆயருடன் ஒன்றுகூடி திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் மூலம், திருச்சபையை நிர்வகித்து மக்களைப் புனிதப்படுத்தும் பணியில் தாம் அவரது உழைப்பாளர்கள் என்பதற்கு சான்று பகர்வதுடன் தமது குருத்துவ வாக்குறுதிகளையும் புதுப்பிக்கின்றனர். திருச்சபையில் தொடர்ந்து பிரசன்னமாயிருக்கும் கிறிஸ்துவின் பலியும் அவரது குருத்துவத்தில் அவர்கள் கொண்டுள்ள பங்கும் இத்திருச்சடங்கில் தெளிவாகக் காட்டப்படுகின்றன.

இன்று திருவருட்சாதனங்களில் பயன்படுத்தப்படும் நோயாளர்களின் தைலம், ஆயத்தக்காரரின் தைலம், கிறிஸ்மஸ் தைலம் என்பன மந்திரிக்கப்படுகின்றன.



### புனித வியாழன்

இன்று திருப்பலி மாலை வேளையில் ஒப்புக்கொடுக்கப்படும். மகிழ்ச்சியின் நாளாகிய இன்று குரு வெண்ணிற திருவுடை அணிந்திருப்பார். இன்று குருத்துவம். நற்கருணை என்பவற்றை இயேசு ஏற்படுத்தியதோடு அன்பின் கட்டளையையும் தந்த நாளாகும். இன்று உன்னதங்களிலே கீதம் இசைக்கப்பட்டு, மணிகள் ஒலித்து மகிழ்ச்சி கொண்டாடும். இன்று ஒலித்த இந்த கீதமும் மணிகளும் மீண்டும் உயிர்ப்பு விழாவன்றே ஒலிக்கும். இன்று விசுவாசப்பிரமாணம் சொல்லப்படுவதில்லை. வெள்ளிக்கிழமை விசுவாசிகளுக்கு வழங்கப்படும் நற்கருணை இன்றே அர்ச்சித்து வைக்கப்படும்.

இன்று இயேசுவின் அன்புத்திருநாள். உலகம் முடியுமட்டு நம்மோடு இருக்க ஆவல்கொண்ட இறைவன் திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். தம் உடலையும் இரத்தத்தையும் ஆன்ம உணவாகத் தந்து புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். “**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**” என்று கூறி அப்போஸ்தலர்களை அபிஷேகம் செய்வதன் மூலம் மனிதர்களோடு தம் குருத்துவத்தைப் பகிர்ந்துகொண்டார். தமது அன்பினை வெளிப்படுத்த சீடர்களின் கால்களைக் கழுவினார்.

இன்றைய பெருவிழாத் திருப்பலி வார்த்தை வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது.



### I இறைவாக்கு வழிபாடு

#### 1.முதல் வாசகம் (விடு.ப. 12:1-8:11-14)

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்க, ஆண்டவரின் பாஸ்காவை கொண்டாடும்படி கடவுள் அறிவுறுத்துகின்றார். அவ்விழாவைக் கொண்டாடும் விதிமுறைகளையும் தொடர்ந்து அதனைத் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடும்படியும் கடவுள் அம்மக்களுக்குக் கூறுகிறார். பாவப்பிணியிலிருந்து விடுபட்டு அருள் வாழ்வுக்குக் கடந்துசெல்ல வேண்டுமென்பதை இவ்வாசகம் நமக்கு உணர்த்துகின்றது.

#### 2.இரண்டாம் வாசகம் ( 1கொரி. 11:23-26)

நமக்காகத் தம்மையே தியாகம் செய்த கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கையிடுவதே நற்கருணைப் பலியைக் கொண்டாடுவதன் பொருளாகும் என்று புனித பவுல் கூறுகின்றார். இங்கு மையமாக விளங்குவது திவ்விய நற்கருணை ஏற்படுத்தப்படுதலும், பணிக்கான அழைப்பும். “**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**” என்பது முதலாவது திருப்பலி நிறைவேற்றுவதையும் இரண்டாவது அதை வாழ்வதையும் குறிக்கின்றது.

#### 3.நற்செய்தி வாசகம் ( யோவான் 13:1-15)

இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி “ நான் செய்ததுபோல் நீங்களும் செய்யுங்கள் ” என்று அன்புக் கட்டளை கொடுக்கின்றார். தன்னிடமிருந்து தன் சீடர்கள் என்ன கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாரோ அதை சொல்லாலும் செயலாலும் ஆணித்தரமாக உணர்த்துகிறார்.

### II பாதம் கழுவும் சடங்கு

யூத மரபில் அடிமைகள் தம் எசமான்களின் பாதங்களைக் கழுவினார்கள். ஆனால் யேசு ஆண்டவரும் போதகருமாக இருந்தும் தமது சீடரின் பாதங்களைக் கழுவிய செயலின் மூலம் “ உங்களுள் பெரியவனாக இருக்க விரும்புகிறவன் பணியாளனாய் இருக்கட்டும் ” என்று அவர் கூறியதற்கமைய எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்பு செய்து பணிவிடை புரியவேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

### III நற்கருணை வழிபாடு

நற்கருணை வழிபாடு வழக்கம் போல் நடைபெறும். இயேசு நற்கருணையை ஏற்படுத்திய இந்நாளில் மிகுந்த பயபக்தியுடன் அதிற் பங்குகொள்வது அவசியம்.



### IV நற்கருணைப் பவனி

நன்றி மன்றாட்டின் பின் நற்கருணை பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு அதற்கென தயார்செய்யப்பட்ட ஒரு விசேட பீடத்தில் வைக்கப்படுகிறது. பவனியின் போது “**நீ பாடுவாய் என் நாவே**” என்ற பாடல் பாடப்படுகின்றது. மறுநாள் ஆராதனை வரை நற்கருணை இவ்விசேட பீடத்தில் விசுவாசிகளின் ஆராதனைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

தலைமைப்பீடம் வெறுமையாக்கப்பட்டு நற்கருணைப்பேழை திறந்து விடப்பட்டிருக்கும். கிறிஸ்து நமக்காக தம்மையே வெறுமையாக்கினார் என்பதை இது குறிக்கிறது.

## முடிவுரை

**“என்னோடு ஒரு மணிநேரம் உங்களால் விழித்திருந்து செபிக்க முடியவில்லையா” என்று இயேசு அன்று தம் அன்புச் சீடரிடம் கேட்டார். இன்று அதையே எம்மிடம் கேட்கிறார். எனவே சில மணிநேரமாவது, அவருடன் கூடவிருந்து செபிப்போம், அவருக்கு ஆறுதல் அளிப்போம். நாம் இன்று செலவழிக்கும் இந்த சொற்ப நேரம் நமக்கு நல்வாழ்வையும், மன அமைதியையும், துன்பத்தில் ஆறுதலையும், இறுதியில் நித்திய வாழ்வையும் தரும்.**

# திருப்பாடுகளின் வெள்ளி

## முன்னுரை

**பெலிக்கன் பறவை தன் குஞ்சுகளுக்கு தன் இரத்தத்தையே உணவாக அளிக்குமாம். ஆனால் எம் மீட்பராகிய இயேசு தம் உயிரையே எமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். மோயீசன் பாலைவனத்தில் பாம்மை உயர்த்தியதைப் போல் மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும் என்னும் முன்னறிவிப்பின்படி மூன்று ஆணிகளில் மும்மணிநேரம் தொங்கி, வானகத் தந்தைக்குத் தம்மைப் பலியாக்கிய நாள். அவமானத்தின் சின்னமாக இருந்த சிலுவை எமது பாஸ்கா செம்மறியாகிய கிறிஸ்து அதன்மேல் பலியிடப்பட்டமையால் புனித சின்னமான மாறுகின்றது. திருச்சபை இன்று அச்சிலுவைக்கு விசேட ஆராதனை செலுத்துகின்றது.**

**ஏறத்தாழ பி.ப. 3 மணியளவில் திரிகள், பீடச்சீலை, மலர்கள் அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாக இருக்க, முன்னுரை, பாடல்கள், “பிதா, சுதன் ” எதுவுமின்றி இன்றைய இன்றைய வழிபாடுகள் ஆரம்பமாகும். இரட்சகரின் மரணத்துக்காக தாய்த் திருச்சபை இன்று துக்கிக்கின்றது என்பதை இது காட்டுகின்றது. பாடுபட்ட சுரூபம் மட்டும்தான் பீடத்தில் தனித்து நின்று நம் கவனத்தைக் கவருகிறது.**


**குரு ஆண்டவரின் பாடுகளுக்கு அடையாளமாக செந்நிற திருவுடை அணிந்து முகங்குப்புற விழுந்து செபிப்பார். இது கிறிஸ்துவின் மரணத்தால் வந்த துயரத்தினையும் அவர் விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து நம்மை மீட்டார் என்பதையும் குறிக்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வார வழிபாடுகள் . . .

**இன்றைய வழிபாடு வார்த்தை வழிபாடு, விசுவாசிகள் மன்றாட்டு திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து என்னும் 4 பகுதிகளைக் கொண்டிருக்கும்.**

## I இறைவார்த்தை வழிபாடு



### 1.முதலாம் வாசகம் (ஏசாயா 52:13-53:12)

அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போல் நம் பாவங்களுக்காக இறைமகன் இயேசு எவ்வாறு வேதனைப்படப் போகிறார் என்பதை இறை வாக்கினர் ஏசாயா துன்பறும் ஊழியனைப்பற்றிய இப்பகுதியில் எடுத்துரைக்கிறார்.

### 2.இரண்டாம் வாசகம் (எபி. 4:14-16;5:7-9)

நம் தலைமைக் குருவாகிய இயேசு, பாவத்தைத் தவிர மற்றெல்லாவற்றிலும் நம்மைப் போல் ஒருவராயிருப்பதால் நம் குறைபாடுகளைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்லர். எனவே அவரில் விசுவாசம் கொண்டால் நம் பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதை இவ்வாசகம் உணர்த்துகிறது.

### 3.நற்செய்தி வாசகம் (யோவான் 18:1-19:42)

வாழ்த்துரை, சிலுவை அடையாளம் எதுவுமின்றி புனித யோவான் நற்செய்தியிலிருந்து திருப்பாடுகளின் வரலாறு வாசிக்கப்படும்: இதனை மூவர் வாசிப்பர்.

### 1.விசுவாசிகளின் மன்றாட்டு

இன்றைய விசுவாசிகளின் மன்றாட்டுக்கள் நிலையானவை. திருச்சபையால் இன்றைய வழிபாட்டுக்கென தரப்பட்டுள்ள மன்றாட்டுகளே இதில் இடம்பெறும். அவையாவன: திருச்சபைக்காக, தலைமை ஆயருக்காக, திருச்சபையில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்காக, ஞானஸ்நானம் பெற ஆயத்தம் செய்வோருக்காக, கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக, யூதர்களுக்காக, கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்காக, நாடுகளை ஆள்வோருக்காக, துன்புறுத்துவோருக்காக செபிப்பதாக அமையும்.

## II திருச்சிலுவை ஆராதனை



இன்றைய வழிபாட்டிற்கேயுரிய சிறப்பம்சம் திருச்சிலுவை ஆராதனையாகும். ஒரு பெரிய சிலுவை **"திருச்சிலுவை மரமிதோ"** என்னும் வார்த்தைகளோடு திரைநீக்கம் செய்யப்பட்டு மக்கள் முத்தி செய்வதற்காக வைக்கப்படும். ஆண்டவரின் பாடுகளை உருக்கமாக நினைவுகூரும் பொருட்டு இச்சடங்கு மௌனமாகவும் பயபக்தியாகவும் செய்யப்படவேண்டும்.

## III திருவிருந்து



படத்தின்மீது பீடத்துகில் விரிக்கப்பட்டு, பின் பரலோக மந்திரத்தில் ஆரம்பமாகி, மக்களுக்கு நற்கருணை வழங்கப்படும். நன்றி மன்றாட்டுடன் வழிபாடு **"பிதா,சுதன்..."** இன்றி முடிவடையும்.

இவ்வழிபாட்டைத் தவிர இயேசுவின் பாடுகள், மரணத்தை நினைவுகூரும் திருச்சிலுவைப்பாதை, ஆசந்தி பவனி, பாடுகளைப் பற்றிய தியானம் போன்றவை காலையிலோ வேறு வசதியான நேரத்திலோ நடைபெறலாம்.

## புனித சனி

## பாஸ்கா திருவிழிப்பு




### முன்னுரை:

**இந்த நாளில் திருச்சபை ஆண்டவரின் உயிர்ப்புக்காகக் காத்திருக்கின்றது. ஆகவே இன்று இரவு பாஸ்கா திருவிழிப்புச் சடங்குகள் நிறைவேறும் வரை ஆலயங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை. பாஸ்கா விழா திருச்சடங்குகள் உயிர்ப்பின் மகிழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. கிறிஸ்துவின் உயிர்ப்பால் இருள் மறைந்து ஒளி பிறந்தது. படைப்பு அனைத்தும் புத்துயிர் பெற்றது.**

**குருவானவர் மகிழ்ச்சியின் அடையாளமாக வெண்ணிற திருவுடை அணிந்திருப்பார். இன்றைய வழிபாடு ஒளி வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு என நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.**

## I ஒளி வழிபாடு



### 1.புதுத்தீயை மந்திரித்தல்

கல்லிலிருந்து புதிதாக உண்டாக்கப்பட்ட ஒளி இன்று கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சான்று பகர்கின்றது. கிறிஸ்து உலகின் ஒளியாகவும் பாவ இருளை வென்ற வெற்றி வீரராகவும் காட்சியளிக்கின்றார். தாய்த் திருச்சபை இவ்வொளியின் மேல் அகமகிழ்ந்து எல்லோரையும் இவ்வெளிச்சத்துக்கு வர அழைக்கின்றது.

விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருக்க, ஆலயத்திற்கு வெளியே ஒளி மந்திரிக்கப்பட்டு புதுத் தீயிலிருந்து பாஸ்காத் திரி பற்றவைக்கப்படுகிறது. உயிர்த்த கிறிஸ்து நம் மத்தியில் இருக்கிறார் என்பதற்கு பாஸ்கா திரி அடையாளமாக இருக்கிறது.

பாஸ்கா திரியில் வரையப்படும் சிலுவை, சிலுவை மரணத்தால்தான் கிறிஸ்து மகிமை பெற்றார் என்பதையும் கிரேக்க மொழியின் முதலெழுத்தும் கடைசி எழுத்துமாகிய அல்பா, ஒமேகா ($\alpha$ ,$\Omega$) ஆகியன கிறிஸ்துவே முதலும் முடிவும் என்பதையும் உணர்த்துகின்றன. நடப்பாண்டின் நான்கு எண்கள் காலங்கடந்த கடவுள், என்றென்றும் இருந்தவர், இருக்கிறவர், இருப்பவர் என்பதைக் காட்டும்.

**கிறிஸ்து நேற்றும் இன்றும்**
**முதலும் முடிவும்**
**அல்பாவும்**
**ஒமேகாவும்**
**காலங்கள் அவருடையன**
**யுகங்களும் அவருடையன**
**மாட்சியும் ஆட்சியும் அவருக்கே**
**என்றென்றும் எக்காலமும் ஆமென்.**

இவ்வார்த்தைகளை உச்சரித்து சிலுவை அடையாளத்தையும் குறியீடுகளையும் திரியின் மீது வரைந்தபின் அதில் கிறிஸ்துவின் 5 காயங்களைக் குறிக்க ஐந்து சாம்பிராணி மணிகளைப் பதிக்கும் போது

1. **தம்முடைய பரிசுத்த**
2. **மகிமையான காயங்களால்**
3. **ஆண்டவராகிய கிறிஸ்து**
4. **நம்மைக் கண்காணித்து**
5. **பாதுகாப்பாராக ஆமென்.**

என்று கூறிச் செபிப்பர்.

### 1.பாஸ்கா பவனி



**"கிறிஸ்துவின் ஒளி இதோ"** என்று பாஸ்கா திரியை உயர்த்தி குரு மும்முறை பாட, எல்லோ ரும் **"இறைவா உமக்கே நன்றி"** என்று பதிலுரை கூறி பாஸ்கா திரியிலிருந்து பற்றவைக்கப்பட்ட திரிகளுடன் மக்கள் குருவைத் தொடர்ந்து ஆலயத்துள் நுழைவர்.

அன்று இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்து வாக்குத்தந்த பூமிக்குச் சென்றபோது இறைவன் அக்கினித் தூதனாக அவர்களை வழிநடத்தினார். இறைமக்களாகிய கிறிஸ்துவின் ஒளியில் நடந்து, அவரது ஒளியை எல்லா மக்களுக்கும் காட்டி பரலோக தந்தையை நோக்கிய பயணத்தில் சென்றுகொண்டேயிருக்க வேண்டுமென்று இப்பவனி காட்டுகின்றது.

### 2.பாஸ்கா புகழுரை

குரு பீடத்தை அடைந்ததும் இவ்விரவின் மகிமையைக் குறிக்கின்ற புகழுரை பாடப்படும். கடவுள் மனிதனை மீட்ட மீட்பின் நற்செய்தியை, கிறிஸ்துவினது உயிர்ப்பின் நற்செய்தியை குரு அறிக்கையிட்டு இறைவனைப் புகழ்ந்து பாட மக்கள் கையில் எரியும் திரியைப் பிடித்துக்கொண்டு இதனைச் செவிமடுப்பர்.

## II வார்த்தை வழிபாடு

மறைநூல் வாசகங்களை வாசிக்கக் கேட்டுத் தியானிப்பது பாஸ்கா திருவிழிப்பின் சிறப்பான அம்சமாகும். பழைய ஏற்பாட்டில் ஏழும் புதிய ஏற்பாட்டில் இரண்டுமாக ஒன்பது வாசகங்கள் வாசிக்கப்படும். தேவை ஏற்படின் பழைய ஏற்பாட்டில் இரு வாசகங்கள் குறைக்கப்படலாம். ஆனால் செங்கடலைக் கடத்தல் இன்றைய விழாவில் முக்கியம் என்றபடியால் அது கட்டாயம் வாசிக்கப்படும்.

பரந்த அளவில் எடுக்கப்பட்டுள்ள இவ்வாசகங்கள் படைப்பிலிருந்து உயிப்பு வரை மீட்பு வரலாற்றின் முக்கிய கட்டங்களை எடுத்துக்காட்டி, வரலாற்றில் இறைவனின் தொடர்ச்சியான செயற்பாட்டை உணர்த்துகின்றன. காலத்துக்குக் காலம் இறைவனது உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு கிறிஸ்துவில் உச்சகட்டத்தை அடைவதைக் காட்டுகின்றன.

**1ஆம் வாசகம் தொ.நூ. 1:1-2 ; 2 அல்லது 1:1, 26-31**
படைப்பின் வரலாறு

**2ஆம் வாசகம் தொ.நூ. 22:1-18 அல்லது 22:1,2,9, 10-13, 15-18**
ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடுதல்

**3ஆம் வாசகம் - வி.ப. 14:15-15:1**
செங்கடலைக் கடந்த வரலாறு

**4ஆம் வாசகம் - ஏசாயா 54:5-14**
புதிய ஜெருசலேம்

**5ஆம் வாசகம் - ஏசாயா 55:1-11**
அனைவருக்கும் மீட்பு அருளப்படுகிறது

**6ஆம் வாசகம் - பாருக் 3:9 - 15 ; 32:4,4**
ஞானத்தின் ஊற்று

**7ஆம் வாசகம் - ஏசே. 36:16-28**
புதிய உள்ளம், புதிய மனப்பாங்கு

**திருமுகம் - ரோமர் 6:3-11**
நாம் கிறிஸ்தவர்கள் என்பதால் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் உரிமையுடன் பங்கு கொள்கிறோம்.

**நற்செய்தி - மத்தேயு 28:1-10**
அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்.
உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்கு போய்க் கொண்டிருக்கிறார்.

## III திருமுழுக்கு வழிபாடு



1.புனிதர்களின் பிரார்த்தனை பாடப்படுகிறது

2.புதிய நீர் மந்திரிக்கபடுகிறது. குரு பாஸ்கா திரியை நீர்த் தொட்டியினுள்ளே வைத்து ஞானஸ்நானத்தால் கிறிஸ்துவுக்குள் அடக்கம் செய்யப்பட்ட அனைவரும் அவரோடு வாழ்விற்கு உயிர்த்தெழ வேண்டுமென்று செபிப்பார்.

3.ஆதித் திருச்சபையில் புதிய கிறிஸ்தவருக்கு இன்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. தமது ஞானஸ்நானத்தை நினைவுகூர்ந்து விசுவாசிகள் இன்று திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப் பிப்பார்.

## IV நற்கருணை வழிபாடு

காணிக்கை மன்றாட்டிலிருந்து நற்கருணை வழிபாடு தொடரும்.

## உயிர்ப்பு ஞாயிறு



உயிர்த்த கிறிஸ்துவைக் குறிக்கும் அடையாளமாகிய பாஸ்கா திரியானது இன்றுமுதல் பாஸ்கா காலம் முழுவதும் முக்கிய வழிபாடுகளின் போது ஏற்றிவைக்கப்படும். அல்லேலுயா கீதம் இன்று முதல் பாடப்படும்.

**முதல் வாசகம் - தி.தூ.ப. 10:34,37-43**
இராயப்பர் தம் அருளுரையில் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சான்று பகர்கின்றார்.

**இரண்டாம் வாசகம் - கொலோ. 3:1-4**
உயிர்த்த கிறிஸ்து புதுவாழ்வுக்கு ஊற்று

**நற்செய்தி வாசகம் - மத்தேயு 28:1-10**
அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்.
உங்களுக்கு முன்பாக கலிலேயாவுக்கு போய்க்கொண்டிருக்கிறார்.

### முடிவுரை

**புனித வார நிகழ்வுகள் வெறும் சடங்குகள் அல்ல. தியானிக்கப்பட வேண்டியவை. கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பன எவ்வாறு உயிர்ப்பு என்னும் மகிமைக்கு வாயில்களாக அமைந்தனவோ அவ்வாறே எமது வாழ்வின் துன்ப அனுபவங்களும் எம்மை மகிமைக்கு இட்டுச் செல்லும் வழிகளாக இருக்கவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்றிய உண்மையுள்ள ஓர் ஊழியனாக தமது உயிரை தம்முடைய தந்தையின் கரங்களில் கையளித்து இறைசித்தத்தை மகிமைப்படுத்துகிறார்.**

இறையிரக்கம், இரக்கம் காட்டப்படக் கூடாதவர்களுக்கும் இரக்கம் காட்டும், கருணை கொள்ளப்படக் கூடாதவர்களுக்கும் அன்பு செலுத்தும் என்பதை இந் நிகழ்வினூடாக எண்பிக்கிறது. ஆம், இயேசுவின் இரக்கம், ஊதாரியை அரவணைத்து விபச்சாரியை மன்னித்து பாவியோடும் பந்தியமரும். அதனால், குற்றத்தைக் கழுவி, மனக் குழப்பத்தைப் போக்கி, கலக்கத்தை நீக்கித் தெளிவையும், நிம்மதியையும், மனமகிழ்வையும் தருகிறது. ஏன்?... இன்று நாங்கள் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் கூட அவரது இரக்கத்தினால் தான்.

## தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்

(லூக்.23 : 46)

இவ்வார்த்தைகளை திருப்பாடல் 31இல் காணலாம். இவ் இறை வேண்டலை ஒவ்வொரு யூதத் தாயும் தனது பிள்ளைக்கு சிறு பராயத்திலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். இவ் இறை வேண்டல் தான் நாளின் கடைசி வேண்டுதலாக இருக்கும். எனவே, அன்னை மரியாவும் பாலகன் இயேசுவுக்கு இவ்வேண்டலை உணவோடு சேர்த்து ஊட்டியிருப்பாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இயேசு பாலகனாக வளர்ந்து, சிந்திக்கத் தொடங்கும் வேளையிலிருந்து விண்ணகத் தந்தைக்கும் தமக்குமுள்ள உறவை உணர்ந்து கொள்ளுகின்றார். இயேசுவின் பன்னிரெண்டாவது வயதில் நடந்த சம்பவம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஜெருசலேம் ஆலயத் திருநாள் கடமைகளை நிறைவேற்றிவிட்டு இயேசுவின் பெற்றோர், உற்றார் வீடு திரும்புகையில், அவர் ஆலயத்திலேயே தங்கிவிடுகிறார். அன்னை மரியாவும், தந்தை சூசையும் அங்கலாய்ப்போடும், ஆதங்கத்தோடும் தேடி, மூன்றாம் நாள் ஆலயத்தில் கண்டபோது, தமது தந்தையின் அலுவல்களில் அமிழ்ந்திருப்பதாகக் கூறுகின்றார்(மத்.2 : 50) தந்தை - மகன் உறவு வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து முழுமை பெறுகின்றது. அதனால்தான், தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தமது உணவாகக் கொள்கிறார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே தமது பணியாக்குகிறார். (யோவா. 6 : 39)

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்றிய உண்மையுள்ள ஓர் ஊழியனாக தமது உயிரை தம்முடைய தந்தையின் கரங்களில் கையளித்து இறைசித்தத்தை மகிமைப்படுத்துகிறார். தந்தை விரும்பினால் தமது துன்பக்கலத்தை நீக்கட்டும் என்றார். இருப்பினும், தமது விருப்பமல்ல தந்தையின் சித்தமே நிறைவேறட்டும் என்கிறார் (லூக்.22:42). ஆம், இயேசுவின் இறைவேண்டலின் அர்த்தம் அங்குதான் பிறக்கிறது. தந்தைக்குத் தம்மைக் கையளித்து அவருக்குத் தம்மை காணிக்கையாக்குகிறார்.

**கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றிய நிகழ்வு, கல்வாரியில் நிகழப்போகும் நிகழ்விற்கு ஒரு அற்புதமான முன்னடையாளமேயாகும். கானாவூரில், தாயின் வேண்டுகோளுக்கிணங்கி நிகழ்த்தப்பட்டது. கல்வாரியில், தாமே மாபெரும் கொடையாகத் தமது தாயை அன்புச் சீடருக்குக் கொடுக்கிறார்.**

## அம்மா இவரே உம் மகன், இவரே உம் தாய்

(யோவான் 19 : 26, 27)

மகன் சிலுவையில் தொங்குகிறார். பெற்ற தாய் அதனடியில் நின்று கொண்டு துடிதுடித்திருப்பாள் என்பதா? அல்லது தமது மகனின் வாழ்நாளில் பயணித்து, பாடுகளில் பங்கெடுக்க கொடுத்து வைத்தவள் என்பதா? எப்படியிருப்பினும், மனித கண்ணோட்டத்திலே அந்நேரத்தில் அவள் வியாகுலத்தாய்தான்.

இருப்பினும், யோவான் நற்செய்தியாளர் கானாவூர் திருமண நிகழ்வுக்கும் (யோவான்.2), கல்வாரி நிகழ்ச்சிக்கும் (யோவான்.19) இடையே ஒரு தொடர்பைக் காட்ட விளைகிறார். இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் தமது தாயை "அம்மா" என்றே அழைக்கிறார். அதாவது கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றிய நிகழ்வு, கல்வாரியில் நிகழப்போகும்

**ஒரு குழந்தைக்கு எப்படியாக அப்பா, அம்மா இன்றியமையாதவர்களோ, அதேபோல நம்பிக்கை கொண்டவருக்கும் ஆன்மீக குடும்பத்தின் தந்தையும், தாயும் முக்கியமானவர்கள்.**

நிகழ்விற்கு ஒரு அற்புதமான முன்னடையாளமே ஆகும். கானாவில் தாயின் வேண்டுகோளுக்கிணங்கி நிகழ்த்தப்பட்டது. கல்வாரியில் தாமே மாபெரும் கொடையாகத் தமது தாயை அன்புச் சீடருக்குக் கொடுக்கிறார். இவ்வன்புச் சீடன், இயேசுவால் அன்பு செய்யப்படும் அனைத்துச் சீடர்களையும் சுட்டி நிற்கிறார். இந்த அன்புச் சீடர்கள் யாரென்றால் கிறிஸ்துவின் பெயரைத் தாங்குபவர்கள் மட்டுமல்லாது, அவரின் வார்த்தையின் வழி வாழ்வோரையும் குறிக்கிறது. இவ்வாறாக, அவர் வார்த்தையின் படி வாழ்பவர்கள் அனைவருக்கும் அவள் தாயாக விளங்குகிறாள்.

ஏவாள், படைப்பின் முதற் பெண்ணாகத் தரப்படுகின்றாள். இப்போது, மரியா புதிய ஏவாள் புதுப்படைப்பின் தாயாகக் கொடுக்கப்படுகின்றாள். மரியாவும், சிலுவையடியில் நிற்கும் இயேசுவின் அன்புச்சீடரும் இயேசு - குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அத்தோடு இயேசுவின் இவ்வுலகப் பணியை இவர்களே தொடர்ந்தாற்றவும் பணிக்கப்படுகிறார்கள். மரியாவும், அன்புச் சீடரும் இயேசு - குழுமத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, இன்னும் பலரை பரம தந்தையின் பிள்ளையாக்குகின்றனர். சிலுவையடியில் நின்றுகொண்டு தந்தையின் சித்தத்திற்கு எப்படியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று, மகன் இயேசுவுக்கு கற்றுக்கொடுத்த படிப்பினையை இப்போது தாய் மரியா தமது இத்துன்பகரமான வேளையிலும் வாழ்ந்துகாட்டுகிறாள்.

இயேசுவின் இச்செயலினூடாக திருச்சபை கிறிஸ்தவ வாழ்வின் உள்ளுயிரை உணர்ந்து கொள்கிறாள். அதாவது, இயேசுவில் நம்பிக்கை கொள்பவர் ஆன்மீகக் குடும்பத்தின் அங்கத்தவராக விளங்குகின்றார். ஒரு குழந்தைக்கு எப்படியாக அப்பா, அம்மா இன்றியமையாதவர்களோ, அதேபோல நம்பிக்கைகொண்டவருக்கும் ஆன்மீக குடும்பத்தின் தந்தையும், தாயும் முக்கியமானவர்கள். அவர்கள்தான் விண்ணத்தந்தையும் தாய் மரியாவும் இப்படிச் சொல்வது, எந்த வகையிலும் படைப்பின் காரணராம் கடவுளாகிய தந்தையை படைக்கப்பட்டவர்களுக்கு (உதாரணமாக அன்னை மரியா) சமமாக எண்ணவோ, ஒப்பிடவோ எடுக்கும் முயற்சியல்ல. மாறாக, படைப்பின் பெருமையைப் பார்த்துணர்ந்து படைத்தவனின் மகிமையைப் புகழ்ந்து போற்றுகின்ற முயற்சியே.

எமக்குத் தந்தை ஒருவர் இருக்கிறார். அவர்தான் விண்ணகத் தந்தை. தாய் ஒருவர் தரப்படுகின்றாள் அவர்தாம் அன்னை மரியா. அன்னை மரியாவைப் போல, அன்புச் சீடரைப் போல தந்தையின் சித்தத்திற்கு அமைவோம். அன்புச் சீடராக எம்மையாக்குவோம்.

**எமக்குத் தந்தை ஒருவர் இருக்கிறார். அவர்தான் விண்ணகத் தந்தை. தாய் ஒருவர் தரப்படுகின்றாள். அவர்தாம் அன்னை மரியா.**

## தாகமாய் இருக்கிறது

(யோவா.19 : 28)

கடவுளின் கருணைக்காகத் கத்திக்கத்திக் களைந்து போன ஒருவரை திருப்பாடல் 69இல் காண்கின்றோம். களைப்படைந்து இருக்கின்ற போது சாதாரணமாக தாகம் ஏற்படுக்கிறது. அல்லது காயமடைந்து இரத்தம் வெளியேறினால் இயற்கையாகவே இன்னும் அதிக தாகம் ஏற்படும். அதிலும், அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இப்போ சிலுவையில் தொங்குகின்ற வேளையில் இயேசு ஒரு துளி நீருக்காக தவியாய்த் தவித்திருப்பார். இருப்பினும், யோவான் நற்செய்தியாளரின் கருத்துப்படி, இயேசுவின் தாகம் வெறும் தண்ணீருக்கான தாகம் மட்டுமல்ல இதனைவிட உயர்ந்த ஓர் ஆன்மீக தாகத்தைக் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். ஏனென்றால், இந்நற்செய்தியில் இயேசு ஒரு பிரயாணத்தின் பின்னர் பிதாப்பிதா யாக்கோப்பினுடைய கிணற்றோரமாய் அமர்ந்து (யோவா.4 : 6) தாகம் தணிப்பதற்கான சந்தர்ப்பத்தை, சமாரியப் பெண்ணுடனான உறவை ஏற்படுத்தும் முக்கிய தருணமாக மாற்றிக்கொள்கிறார். யாக்கோப்பின் கிணற்றடியில் தாகத்தைத் தணிக்கும் சந்தர்ப்பத்தை, மேலும் ஓர் உயர்ந்த ஆன்மீக தாகத்தைப் போக்கும் வாய்ப்பாக பயன்படுத்தினார் என்றால், அவ்வாறே சிலுவையின் தாகத்தையும் நாம் நோக்கவேண்டும்.

தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதையே தமது பணியின் உணவாகவும், பானமாகவும் கொள்கிறார். சிலுவை மரணம் மனித மீட்புக்கான தந்தையினுடைய சித்தமாகிறது. இதனை நிறைவேற்றக் காத்திருக்கிறார்.

**யோவான் நற்செய்தியாளரின் கருத்துப்படி, இயேசுவின் தாகம் வெறும் தண்ணீருக்கான தாகம் மட்டுமல்ல, இதனைவிட உயர்ந்த ஓர் ஆன்மீக தாகத்தைக் குறிப்பிடுவதை அவதானிக்கலாம்.**

ஏனென்றால், எதற்காகத் தாகமுற்றாரோ அதற்கான தகுந்தநேரம் அதுதான்.

பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ (மத் 25 : 44) இருக்கும் 'மிகச்சிறியோ'ராகிய அனாதைகள், வறியவர்கள், கைவிடப்பட்டோர், யாருமேயற்றவர்கள், நோயுற்றவர்கள், தனிமைச் சிறையில் தவிப்பவர்கள், கைது காணாமல் போனவர்களால் பரிதவிக்கும் உள்ளங்களுக்கு உதவுவதன் மூலம் இயேசுவின் தாகத்தை இன்று நாம் தணிக்கலாம். அயலவன் பட்டினியிருக்கும் போது எமக்குப் பசித்ததென்றால், அதுவே இயேசுவின் தாகம் தீர்க்கும் ஆரம்பகட்டம்.

**அனாதைகள், வறியவர்கள், கைவிடப்பட்டோர், யாருமேயற்றவர்கள், நோயுற்றவர்கள், தனிமைச் சிறையில் தவிப்பவர்கள், கைது - காணாமல் போனவர்களால் பரிதவிக்கும் உள்ளங்களுக்கு உதவுவதன் மூலம் இயேசுவின் தாகத்தை இன்று நாம் தணிக்கலாம்.**

## எல்லாம் நிறைவேறிற்று

(யோவான். 19 : 30)

யோவான் நற்செய்தியில் இயேசு இறப்பதற்கு முன்சொன்ன இறுதி வார்த்தைகள் இவை. இவ்வார்த்தைகள் இயேசுவின் பணிவாழ்வின் முழுமையைச் சுட்டிக்காட்டுகின்றன. தந்தையின் விருப்பை முற்றுமுழுதாக நிறைவுபடுத்துகிறார். தலைசாய்ந்து ஆவியைக் கையளித்தல் என்பது யோவானுடைய கருத்துப்படி, இயேசுவின் இறுதி மூச்சையல்ல மாறாக, அவரின் ஆவியை, உயிர் மூச்சை உலகிற்குக் கையளிக்கிறார்.

இயேசு உயிர்த்து 40 நாட்களில் பின்னர், அவருடைய விண்ணேற்பின் போது அப்போஸ்தலர்களுக்கு ஆவியானவர் அருளப்பட்டார் எனத் திருத்தூதர் பணியில் படிக்கிறோம். ஆனால், யோவானைப் பொறுத்தவரை உயிர் பிரிகின்ற போதே, ஆவி அன்புச்சீடருக்கும், அன்னைக்கும், அவர்களோடுணைந்தவர்களுக்கும் பொழியப்படுகிறது. இயேசுவின் இந்த ஆவிப்பொழிதல் அவர் மரணத்தின் பலாபலனாக, முதற்கனியாக விளங்குகிறது. இந்த ஆவியே இயேசுவின் அன்புச் சீடரை அவரின் உயிர்கொடுக்கும் உண்மைச் சாட்சிகளாக உலகிற்கு அனுப்பிவைக்கிறது. ஆம், மரணிக்கும் இயேசுவின் முடிவில்லா மூன்று கொடைகள் எவையெனில் அவரின் ஆவி, அன்புச்சீடர், அன்னைமரியா.

ஆம், அவரின் அன்புச்சீடர்கள் இவ்வுலகில் அனாதைகளாக விடப்படவில்லை. அன்னை மரியின் துணையும், ஆவியின் வழிநடத்தலாலும் அவர் பணி தொடரும். எனவே, இயேசுவின் மரணத்தை நினைவுகூருகின்ற நிகழ்வு "பாவம்" என்று பரிதாப்பட்ட அழுகையோடும், புலம்பலோடும் முடிகின்ற ஒரு வழிபாமு அல்ல. இந்நிகழ்வானது இயேசுவின் அன்புச் சீடராகிய எம் அனைவரையும் உறுதிப்படுத்துகின்ற அவர் வழியில் எம்மை அர்ப்பணிக்கின்ற அவரன்பில் எம்மை ஆழப்படுத்துகின்ற அருள்தரும் நேரமாக அவ்வேளை மாறவேண்டும். எனவேதான், இயேசுவின் மரணம் உயிரளிக்கும். வாழ்வுகொடுக்கும் நிகழ்வாக எம்மை வழிநடாத்த வேண்டும்.

**இந்நிகழ்வானது இயேசுவின் அன்புச் சீடராகிய எம் அனைவரையும் உறுதிப்படுத்துகின்ற, அவர் வழியில் எம்மை அர்ப்பணிக்கின்ற, அவரன்பில் எம்மை ஆழப்படுத்துகின்ற அருள்தரும் நேரமாக அவ்வேளை மாறவேண்டும். எனவேதான், இயேசுவின் மரணம் உயிரளிக்கும், வாழ்வுகொடுக்கும் நிகழ்வாக எம்மை வழிநடாத்த வேண்டும்.**

அருட்திரு. செ. அன்புராஜ், அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டப்படும் மனக் கதவுகள்!

மலையிதென நினைத்திருந்த அரசு கூட
மறுகணமே ஆடிமண்ணைக் கவ்வும் பச்சை
இலையாடை எடுத்து மூடும் மரமும் வீழ்ந்து
உதிர்சருகுக் குப்பையாகித் திரளும் எண்ண
அலைமீது பயணிக்கும் அவனி வாழ்வில்
எத்தனைபேர் வந்துபோனார் அவரில் உள்ளம்
குலையாத அமைதிகண்டார் எவரும் இல்லை
கருணையொடு தியாகமுந்தான் உன்னை மீட்கும்

கட்டுவோமே புது வாழ்வைக் குழைத்து அன்பால்
கற்தரையில் நெல்விளைக்கும் குருட்டா சையை
விட்டெழுந்து நாம்நடப்போம் விடிவை நோக்கி
வாழ்வுக்கு ஏங்கியழும் அயலான் துன்பம்
எட்டுமட்டுந் தீர்த்துவிடு! இதயந் திருந்தி
எங்களிலே அவனொருவன் என்று அருளால்
தட்டியுந்தன் மனக்கதவைத் திறந்து பார்க்கும்
தருணமிது தான்மாயத் துயிலை நீக்கு

மு.சிங்கராயர்

## மறுமலர்ச்சி கொடுத்து மக்களை மீட்க

மறுமலர்ச்சி கொடுத்து மக்களை மீட்க
உறுதுணையாய் உயிர்த்த உன்னதனே! போற்றி

சாத்வீக ஒளிபரப்பிச் சமாதான வழிவிரித்து
நீத்தாரில் நின்றுயிர்த்த நிர்மலனே! வாழ்க.

ஒத்திசைவாய் உலகோரை ஒளிமக்கள் ஆக்கிட
எத்திசையும் எழிலெறிக்கும் எம்யேசு! உத்தானம்

இருளான இதயத்தின் கதவுகள் திறக்க
அருளாக உயிர்த்த ஆண்டவனே! அபயமையா!

இரக்கம் சுரக்கும் இறையரசில் நாமிணைய
உருக்கமாய் வேண்டுவது உயிருள்ள விசுவாசம்.

விடுதலைகள் தாங்கிவந்த வெற்றித் திருமகனே!
கெடுபிடிகள் நெருங்காது கையேந்தும் எம்மை

சமுதாயச் சீரழிவைச் சங்கையோடு திசைமாற்ற
அமுதேயும் அருளிரக்கப் பார்வை அவசியமே!

இறப்பிலும் உயிர்ப்பிலும் ஒப்புரவு அளித்தவரே!
உறவுகள் பிரிவுகள் உயிர்காப்பு உம்வசமே!

புத்துயிர் ஊட்டிப் புதுவாழ்வில் உருமாற்ற
வித்தூன்றி நிற்குமே வியப்பான உம்வருகை.
கல்வாரிப் பேரொலி கல்லறையில் பூத்து
நல்லமைதிப் பூங்காவில் நல்வழிகள் ஈந்தது.

ஞா. அரியமலர், மிருசுவில

## ஆசந்தி கொண்டு செல்லும் வேளையிலும் மரித்தலின் மாதாவின் மடியில் வைத்த வேளையும் சொல்லத் தகும் தேவாரப்பாடல்

ஆறிரு சீடருக்கும்
அன்புடன் விருந்தளித்தே
வேறு செய் துரோகியும்மை
வெள்ளி முப்பதற்காய் விற்க

கோறணி யூதர் சூழ்ந்து
கொடுமையாய் பிடித்துக்கட்டி
வாதைகள் செய்ததிந்த
வதனமோ மகனே பாலா

இருவிழி மறைத்துக்கட்டி
இராமுழுவதும் வாதை செய்து
குரு முன்னே கொடுபோய்விட்டு
கொடூரமாய் ஒருவன் கன்னம்

திருகவே அடிக்க நாசி
ஒரு கண்ணும் சிவந்து ரத்தம்
பெருகி நின்றிடவோ உம்மை
பெற்றேனோ மகனே பாலா

தேவாரப்பாடல்

கரத்தில் ஆணி அறைந்தனரோ
கம்பான் கயிட்டு இழுத்தனரோ
சிரத்தே முள்ளை பதித்தனரோ
திகழ்மா மலைமேல் புயன் சிலுவை

மரத்தை இழுத்து சுமத்தினரோ
மாபாவி கட்காய் மனமிரங்கி
அம்பரத்தே உயிர் விட்டெழுந்த சோதி
அமலனே யேசுநாதா

அன்று நான் உன்னைப் பெற்று
அக்களிப்பெல்லாம் உற்றேன்
வண்டனே ஏரோதைக் அஞ்சி
மலர்செடி வனங்கள் யாவும்

கொண்டு சென்றுமை வளர்த்து
கூறு நல் வசனம் கேட்டேன்
இன்று உமைப் பிரிந்து நானும்
இருப்பேனோ மதனே பாலா

மனோகரன்
பொயிட்டி

## சமாதானம் உயிர் பெறட்டும்!

இருளறை தன்னில் பொருளற்ற வாழ்வால்
தப்பறையின் ஈர்ப்பில் திசைமாறிய மாந்தர்க்கு
நல்லிறை வாக்கினால் வழமூட்டியதன் பரிசாய்
சில்லறைக்காய் அதிகார வர்க்கத்தின் பிடியில்
சொல்லறை முள்ளறை வன்முறை பல ஏற்று
கருவறை முதல் இற்றைவரையான எம் பாவத்தைச் சுமந்து
ஆணியறையுண்டு ஆவியை அர்ப்பணித்து ஆகுதியாகி
வைகறையின் கல்லறை நின்றுயிர்த்தார் விடுதலை வேந்தன்

கல்லறைவென்ற திடம் தந்த தியாகச் செம்மலே!
அடைபட்டபாதைகள் முரணுற்ற இதயங்கள்
தடைகளை அகற்றி நல்வழிதொடர வரம் நீ தா!
தேசத்தில் அவலமும் ஓலமும் ஒலித்தது போதும்
புதைகுழிகளும், சாம்பல் மேடுகளும் வெடிமுழக்கங்களும்
கற்குவியல்களும் கல்மனங்களும் வேண்டாம்
சுதந்திரக் காற்றில் வெண்புறாக்கள் சிறகடிக்க
உயிர்ப்பின் சமாதானம் உயிர்பெற உழைப்போம்.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

## ஏனெனில் 'இருப்பவர் நாமே' என்பது எனது பெயர்


நான் இறந்தகாலத்தை எண்ணி
எதிர்காலம் பற்றி
வருந்திக்கொண்டிருந்தேன்
திடீரென நான் இருக்கிறேன்
இதுவே என் பெயர்
என்றார் கடவுள்.
நான் காத்திருந்தேன்
கடவுள் தொடர்ந்தார்...
நீ இறந்தகால தவறுகளை எண்ணி
வருந்தி வாழும் போது
அது கடினமாகவே உள்ளது.
அங்கே நான் இல்லை
ஏனெனில்
"இருந்தவர் நான்"
இதுவல்ல என் பெயர்

நீ எதிர்காலத்தை எண்ணி
அதன் பிரச்சினைகள்
பயங்களோடு வாழ்க்கையில்
அது கடினமாகவே உள்ளது.
அங்கும் நான் இல்லை
ஏனெனில்
"நான் இருப்பேன்"
இதுவல்ல என் பெயர்

நீ இந்த கணப்பொழுதை
வாழ்க்கையில்
அது கடினமே அல்ல
நான் அங்கே இருக்கிறேன்.
ஏனெனில்
"இருப்பவர் நாமே" என்பதே
எனது பெயர்

The New Leader, தமிழில்
அருள்திருஅருட்செல்வன

## கச்சதீவில் 20ஆண்டுகளின் பின்னர் நடந்த திருநாள் நிகழ்வுகளை நீங்களும் பார்க்கலாமே!



கச்சதீவுத் திருநாள் திருப்பலியில் அருள்தந்தையர்கள் ஞானப்பிரகாசம், ஸ்ரனிஸ்லோஸ், பங்குத்தந்தை மொன்பேட், இந்தியாவிலிருந்து வந்த பாம்பன் பங்கு வேளாங்கன்னி ஆலய பங்குத்தந்தை லாசர் அமல்ராஜ், யேசுதாஸ், இராஜசிங்கம், றொபின்சன் ஆகியோரையும் இந்தியாவிலிருந்து வந்த பாம்பன் பங்கு வேளாங்கன்னி ஆலய பங்குத்தந்தை லாசர் அமல்ராஜ் அடிகள் புல்லாங்குழல் வாசிப்பதையும் காணலாம்.



கொடியேற்றி திருநாளை ஆரம்பிக்கின்றார் பங்குத்தந்தை அருகில் அருள்சகோதரர் பத்திநாதரையும், அங்கு கூடியிருந்த இறைமக்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.



இந்தியாவிலிருந்து வந்த பாம்பன் பங்கு வேளாங்கன்னி ஆலய பங்குத்தந்தை மன்னிப்பு வழிபாடு நிகழ்த்தும்போதும், நெடுந்தீவு பங்கைச் சார்ந்த ஒருவரும், இந்தியாவிலிருந்து வந்த கடற்றொழிலாளி ஒருவரும் 1ஆம், 2ஆம் வாசகங்களை வாசிக்கும்போதும், திருச்சொருப பவனியின் [illegible] ஆகியோரும் முறையே படங்களில் காணப்படுகின்றனர்.

படங்கள்: கிறிஸ்தீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

## அட்லிஸ் மனிதனாக...

அன்புக்குரிய இளைஞனே
வணக்கங்கள்!
இன்று உன்னுடன் மட்டுமே...
உன் அசைவுகளை
உன் செயற்பாடுகளை
உன் உணர்வுகளை
உன் நிலைப்பாட்டை
வீதியோரங்களிலும்
சந்து பொந்துகளிலும்
மத தலங்களிலும்
கல்வி நிலையங்களிலும்...
உற்று நோக்குகின்றேன்.
உன்னை திட்டுவதற்காகவோ,
என்னிலிருந்துன்னை
அன்னியமாக்கவோ,
விலக்கிக்கொள்வதற்காகவோ
இல்லவே இல்லை.
சில கேள்விகளை உன்னுள்
வீசிறிவிடுகிறேன்,
சில மதிப்பீடுகளை
விதைத்து விடுகிறேன்.
நீ புது மனிதனாய் மாறிட
பச்சையாக சில கேள்விகள்...
ஆச்சிரமத்தின் முன்னும்
பதுவை புனிதரின் பாதைகளிலும்
ஏனைய மத தலங்களிலும்
உன் 'வீரதீர' விளையாட்டு
களுக்கு
எல்லையே இல்லையா?
உன் அடாவடித்தனங்களுக்கு
முடிவே இல்லையா?
உன் சேட்டைகளுக்கு
அளவே இல்லையா?
பெண்ணொருத்தி
அழகாயிருப்பது
அவள் செய்த குற்றமா?
அவள் மார்பகங்களும்
உடல் அமைப்பும்
உணர்வுக்கு மட்டும்
உரியவையா?
நீ வேண்டிய மாதிரி
தீண்டிச் செல்லவும்
சேட்டை விடவும்
பிடித்து இழுக்கவும்
அவள் 'விளையாட்டு
பொருளுமல்ல
உணர்வற்ற சடமுமல்ல!
அவள்
உணர்வும், அறிவும் உள்ளவள்.
அழகும் அன்பும் உள்ளவள்
இறைசாயலில்
படைக்கப்பட்டவள்
ஆணுக்கு சமமானவள்
நண்பனே இதை மறந்திடாதே!
குறைந்தது மனிதப் பிறவியாக
நோக்கத் தயங்காதே.
"விலங்கு வீதியைப் பார்க்காது"
"மனிதன் மதிப்பீடுகளின்
பிறப்பிடம்"
நீ என்ன சொல்கின்றாய்...?
உனக்கும் ஆறறிவுண்டு.
நீயும் மனிதன்
இதை உணர்ந்துகொள்
பெண்ணுக்கு நல்வாழ்வு
கொடுக்க முடியாவிட்டாலும்
அவள் வாழ்வை கெடுக்காதே
சினிமாவுக்கும் Blue Film க்கும்
அடிமையான விலங்காக மாறி
வீதியை பார்க்க முடியாதவனாய்
மாறிவிடாதே
உன் அட்டகாசத்தை நிறுத்தி
"அட்லிஸ்" மனிதனாக மாறு
சட்டம் உன்னைக்
கைது செய்ய முன்
மனதில் மாற்றம் கொள்
உணர்வுகளுக்கு
அடிமையாகமல்
அவற்றை சரி செய்து கொள்
உனக்கான மாபெரும் பணி
இப்பாரினில் தேங்கிக்
கிடக்கிறது.
சமுதாயத்தின் முதுகெலும்பே
அதன் தலைவலியாய்
மாறிவிடாதே
மானிடத்தின் புதுவாழ்வுக்காய்
உன்னை அர்ப்பணம் செய்
அதிகம் பேசிவிட்டேனா?
உணர்வு கொதிக்கின்றதா?
அமைதியாய் இரு
அர்த்தங்கள் பல தெரியும்
உன் எண்ணங்கள் ஆழம்
பெறட்டும்
இறையாசீர் என்றும் உன்னுடன்

- சின்னமணி -

# வயது வந்தோர்க்கு மட்டும்

# ? Adults Only

## நெஸ்டரின் பணயம்

### (ஒரு பொலிவிய போராளியின் போராட்ட நாட்குறிப்பு)

**MY LIFE FOR MY FRIENDS**
(Nestor Paz)

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

நெஸ்டர் பிறந்த பொலிவியா நாடு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மக்கள் எழுச்சிக்கு புகழ்பெற்ற நாடு. 1809ல் 'சியூ கியுசாகா' அறிக்கையை வெளியிட்டு, இஸ்பானிய நாட்டுக் கெதிராக கிளர்ந்தெழுந்த முதல் இலத்தீன் அமெரிக்க நாடு எனும் பெருமையும் இதற்கு உண்டு. எனினும் 1975ல் ஆகஸ்ட் 6ம் நாள் தனிக் குடியரசு நாடாக மாறிய 150வது ஆண்டைக் கொண்டாடிய போது 188 இராணுவக் கிளர்ச்சிகளை சந்தித்திருந்தது. அந்நாட்டின் அரசு, ஆளும் வர்க்கத்தினரின் கைப்பொம்மையாக இருந்து கொண்டு ஏழை எளியவர் மீது மிகவும் கொடூரமான அடக்கு முறையை அவிழ்த்துவிட்டிருந்தது. இளைஞர்கள் பலர் இவ்வதிகாரத்திற்கு எதிராக எழும்பினர். ஆயுதப் போராட்டம் மூலமாகவே அரசை அடக்கமுடியும் என உணர்ந்தனர்.

தியோபோனது (Teoponte) எனும் போராட்ட அமைப்பினில் இணைந்தனர். இவ்வமைப்பு பொவிலிய தேசிய விடுதலைப் படையினரால் 1970ல் உருவாக்கப்பட்டது. பொலிவியாவின் பொருளாதாரம் ஆட்சியாளர்களினால் சீரழிக்கப்பட்டபோது சீர்செய்ய முனைந்தது இவ்வமைப்பு. நுழைந்திருந்த 24 பன்னாட்டு நிறுவனங்களின் செயற்பாட்டை எதிர்த்தது. இராணுவப் புரட்சியின் மூலம் அதிபராகிய ஆல்பிரட் ஒவண்டோவின் 'புரட்சிகர தேசிய அமைப்பு' எனும் அறிவிப்பை எதிர்த்தது. அரசியல் ரீதியான தாக்கத்தை உண்டுபண்ணவும் இராணுவத்தை பலமற்ற தாக்கவும் அயுதம் ஏந்தியது அவ்வமைப்பு. போரில் நுழைந்த 87 நாட்களில் அமைப்பே முற்றுப் பெற்ற போதிலும் அவ்வமைப்பின் இலட்சியம் அடிப்படையில். ஆழமான வெற்றி பெற்றது. மக்களைத் தயாரிக்காததும், தகுந்த பயிற்சி பெற்ற போராளிகள் இன்மையாலும், அடித்தள அமைப்புகள் இன்மையாலும், அனுபவமற்ற தலைவர்களாலும் வீரர்களுக்கு அரசியல் தெளிவின்மையும் தோல்வியைக் கொணர்ந்தது என எஞ்சியோர் கண்டறிந்தனர்.

இந்நிலையில் செகுவேரா சுட்டுக்கொல்லப்பட்டு சரியாக மூன்றாண்டுகளின் பின்பு நெஸ்டர் வீரமரணம் எய்தினார். பசியால் மரணித்த போராளி நெஸ்டரின் அனுபவங்களும், சிந்தனைகளும், இறையனுபவமும், மனிதரை அன்பு செய்ய வேண்டுமென்ற ஆர்வமும், சுகங்களை, மனைவியையே துறந்த மாமனிதரின் மடல்களை மேலே தொடர்ந்து விடுவிக்க முடியும். அன்பு, வெறும் பேச்சோடு, மறுக்கப்படும் வெற்று வார்த்தையல்ல வாழ்வில் வாழ்ந்து காட்டப்பட வேண்டும் என உணர்த்துபவரின் போராட்டக் குறிப்புகள் எமது இலட்சியங்களையும், குறிக்கோள்களையும் சீர்செய்யும் என்பதில் ஐயமில்லை. பசியின் கொடூரத்தால் ஏற்பட்ட அவரது சாவே நற்செய்தியின் கருவான நீதிக்காக மக்களின் விடுதலைக்காக போராடுபவரின் அழியா சின்னமாக உள்ளது. (தொடரும்...)


நெஸ்டரின் மனைவி செசி

## காணாமல் போவோர்

இன்றைய உலக பரிணாம வளர்ச்சியின் முன்னோடிகள் எம் இளம் சந்ததியினர் என்பதனை யாராலும் மறுக்க முடியாது. பரிணாம வளர்ச்சியில் பல அற்புதங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் உலகு பல ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இரண்டுமே இளம் சந்ததியினரால் கொடுக்கப்படுபவை. இதில் முக்கிய பங்குவகிப்பவர் இளைஞரே. காரணம் ஒரு குடும்பத்தில் முதன்மையானவனாக சமூகத்தில் அந்தஸ்து பெற்றவனாக யாவற்றையும் அடக்கி ஆளும் பொறுப்பு இளைஞனிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தினை நல்வழியில் பயன்படுத்தும் இளைஞரைக்காட்டிலும் அதனை தவறாகப் பயன்படுத்துவோரே இன்று அதிகமாக காணப்படுகின்றனர். முக்கியமாக யாழ். குடாநாட்டில் உள்ள இளைஞர்களில் பலர் தமக்கு கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தினை தவறாகப் பயன்படுத்துவதினால் ஆபத்துக்களிற்குள் காணாமல்போய்க் கொண்டிருக்கின்றனர் ஒவ்வொரு இளைஞனும் நான் எங்கே எச்சந்தர்ப்பத்தில் காணாமல் போகின்றேன் என்பதனை சிந்திக்க வேண்டியது அவசியம்.

இன்றைய இளைஞர் யுவதிகளிற்குள் கல்வி மட்டத்தில் குறைந்து காணப்படுபவர்கள் இளைஞர்கள். காரணம் பெரும்பாலான இளைஞர்கள் கல்விக்கு மதிப்பளிப்பதில்லை இவர்கள் வெளிநாட்டு மோகத்தினால் கட்டுண்டிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகலாம். இதனால் திறனாய்வுச் சிந்தனையிலிருந்து தவறி விடுகின்றனர். இதனால் வீதிகளில் பெரும் கலாட்டா, பகிடி போன்ற செயற்பாடுகள் அதிகமாகின்றன. பெரியவர்கள், ஆசான்கள், குருமார் என்போர் இவர்கள் பார்வைக்குத் தேவையற்றவர்களாகின்றனர். இதனால் இவர்களது அறிவுரை பயனற்றதாகின்றது. இதன் முடிவு தீய உணர்விற்குள் கட்டுண்டவர்களாக அதற்குள்ளே காணாமற் போகின்றனர்.

புகைத்தல், குடித்தல் என்பவற்றிற்கு அடிமையாகும் இன்றைய இளைஞர்களுள் பலர் காணப்படுகின்றனர். யாழ். போதனா வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் பெரும்பாலான இளைஞர்களின் நோய்க்கு காரணமாக இருப்பது புகைத்தலும் குடியுமாகும். இளம் வயதிலேயே தமது ஆரோக்கியத்தினை தொலைத்தவர்களாக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பார்த்து திருந்தும் இளைஞர்களைக் காட்டிலும் இவர்களையே முன்னோடிகளாக்கி போதையில் முன்னேற முயலும் இளைஞர்களே அதிகம். ஆபத்தினை அழிக்க வேண்டியவர்கள் ஆபத்திற்குள் காணாமற் போய்க் கொண்டிருப்பதுதான் கவலைக்குரியது.

**தயா**

சினிமா என்னும் சிறைக்குள் அடைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பகுதியானவர்கள் இளைஞரே சினிமாவை பொழுதுபோக்காக நோக்காது அதனை வாழ்க்கையில் பிரதிபலித்துக் காட்டும் இளைஞர்கள் இன்று எம்மத்தியில் உண்டு. சினிமா வில்லனை தமது நண்பனாக்கிச் செயற்படும் இளைஞர்கள் இன்று பல தீய காரியங்களில் ஈடுபடுதல் வேதனைக்குரியது. பெண்களை கடத்துதல் கூட்டமாக ரவுடித்தனம் புரிதல் வீதிகளில் பெண்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகள் இன்று அதிகமாகக் காணப்படுகின்றன. மாதுவிற்குள் அடிமையாகி மோகத்தினுள் சிக்கித் தவிக்கும் இளைஞர் அரைகுறையானவற்றை அறிவதில் காணாமற் போகின்றனர். நாட்டின் முதகெலும் எனகருதப்படும் எம் இளைஞர்கள் பல சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வேளை இவ்வாறான தீய செயற்பாட்டிற்குள் காணாமற் போகும் இளைஞர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். இவர்கள் முகவரியற்றுப் போகும் முன் இவர்களை மீட்பது அவசியம். இன்று இவ்வாறான இளைஞரை மீட்கும் பணி வளர்ந்துவரும் இளைஞர் கைகளில். காணாமல்போவோர் புதைக்கப்பட்டவர்களல்ல்அவர்கள் கண்டுபிடிக்கப்படவேண்டியவர்கள்.

## உடனடியாக உங்கள் பதிலை எதிர்பார்த்திருக்கிறேன்...

## இளையோர் கேள்வி - பதில்

**Mr. சின்னமணி,**

என்னுடன் நீங்கள் கதைப்பதற்காய் உங்களுககு எனது நன்றிகள். நீங்கள் ஆணா? பெண்ணா? என்பது எனக்குத் தெரியாது

ஆனால் உங்கள் பெயரின் நிமித்தம் உங்களை Mr என்கிறேன்.

"உன்னை 'நீயாகவே' அன்பு செய்ய முயல்கிறேன்" என்ற உங்கள் ஆக்க வரிகளை உண்மையிலே பம்மாத்து வரிகளாகவே எண்ணுகிறேன். ஏனென்றால் இந்த காலத்தில் என் சொந்த அனுபவத்தின் மூலம் பணம், கல்வி, பதவி இம் மூன்றும் இருந்தால் தான் என்னை அன்பு செய்வார்கள்.

'அன்பு' காசு கொடுத்து வாங்கும் பொருள் என் பெற்றோர் என் உழைப்பை விரும்புகின்றனர். என் சகோதரர்கள் நான் பெற்றோருக்கு எவ்வளவு அதிகம் பணம் தருவேன் அதன் மூலம் தம் சொகுசான வாழ்வை விரும்புகின்றனர். அதுமட்டுமல்ல என் காதலன் என் சீதனத்தால் தன் சகோதரிகளை குடும்பத்தை வளர்க்க நினைக்கிறான் ஒட்டு மொத்தமாக அனைவருக்கும் தேவை பணம்/பணத்துடன் தான் நான் பெற்றோருக்கு கொடுப்பது கடமை என்று கூறிவிடாதீர்கள். நான் கொடுத்ததைக் கூட தரவில்லை என்கிறார்கள். மேலும் மேலும் வாங்க விரும்பி இங்கு உழைப்பது போதாது வெளிநாட்டு திருமணம் செய்துகொள் என்கிறார்கள். என் [illegible] னைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

என்னில் மாற்றம் காண விரும்பும் நீங்கள் இந்தப் பயங்கரமான பணப்பிசாசு அலும். உலகில் எப்படி நான் மகிழ்வடையலாம்? என்று கூறுங்கள் உங்கள் பதில் கண்டு தொடர்வேன்.

*R.Salini, Jaffna*

**சாளினிக்கு வணக்கங்கள்,**

**அன்புக்கும், வழியாட்டல்களுக்கும் திறந்தமனமே அவசியமானது. அது உம்மிடம் இருக்கின்றது. அவ்வளவும் போதுமானது. நீர் கூறியது போல அன்பு காசு கொடுத்து வாங்கும் பொருள்! உண்மையில் அன்பு என்பது ஒரு தீர்மானம். இது நபரை அடித்தளமாகக் கொண்டதே அன்றி பொருட்களைக் கொண்டதல்ல. சிலரது கூற்றுப்படி "உறவு என்பது ஒரு விபத்து" ஆனால் உறவு ஆழமாக்கப்பட வேண்டும். பணத்தை அடிப்படையாகக் கொண்ட "அன்பும்", "உறவும்" இடைநடுவே தரித்து விடும் வாகனங்களைப் போன்றவை. இந்நிலையில் "அன்பையும், உறவையும் துறந்து செல்வது இலகுவானது" அப்படியே அனைவரும் சென்றால் யார் தான் புது வீரி [illegible] யும் புரிந்து கொள்கிறேன். உமக்கு விருப்பமானால் உமக்குத் தெரிந்த வழிகாட்டக்கூடிய நம்பிக்கைக்குரிய ஒருவரோடு பகிர்ந்து கொள்ளும். அது உமது நண்பராகவோ, குரவாகலோ உளநலத் துறையாளராகவோ இருக்கலாம். தீர்க்கமான முடிவை எடுத்து தொடர்ந்து மகிழ்வான பயணம் செய்ய வாழ்த்துக்கள் செபங்களும். நன்றி**

**- சின்னமணி -**

## இளைஞர், யுவதிகளுக்கு ஆங்கில மொழிமூல வகுப்பு!

யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவினரால் ஆங்கில மொழி வகுப்புக்கள் யாழ். மறைக்கோட்டம், இளவாலை மறைக்கோட்டம் ஆகிய இரு மறைக் கோட்டங்களிலும் முறையே யாழ். 81 குருசோ வீதியில் அமைந்துள்ள இளையோர் நிலையத்திலும், மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வளாகத்திலும் வாரம் இரு வகுப்புக்கள் நடைபெற ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆங்கில மொழி வகுப்பிற்கு யாழ். மனித முன்னேற்ற இயக்குனர் (HUDEC) சி.ஜி. ஜெயக்குமார் அடிகள் அனுசரணை வழங்கியுள்ளார். மேலும் அதிகமான இளையோர்க்கு ஆங்கில அறிவும், சான்றிதழும் பெற்றுக் கொள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் உதவியையும் பெற்றுத்தருவதாக வாக்குறுதி கொடுத்துள்ளார்.

மேலும் விபரங்களை பெற்றுக் கொள்ள இளையோர் ஆணைக் குழு இயக்குனருடன் தொடர்பு கொள்ளவும்.

அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ்
இளையோர் ஆணைக்குழு
இயக்குனர்,
இல. 81, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெருசலேம் கல்வாரியும், கருவறைக் கல்வாரிகளும்...

இயேசுவின் இறப்பு என்றோ முடிந்துவிட்ட ஒரு நிகழ்வு மட்டுமல்ல. இன்றும் எம்மத்தியில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நிகழ்வே. இயேசுவின் இறப்பை (கொலையை) எம் மண்ணிலும் காணமுடியும். அன்று ஜெருசலேம் கல்வாரி மலையில் மட்டுமல்ல இன்றைய கருவறைக் கல்வாரிகளிலும் இயேசுக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். கல்வாரியையும் கருவறைகளையும் அலசுகிறேன்.

ஜெருசலேமில் இருந்து கல்வாரி மலைக்குன்று ஒரு கொலைக் களமாகக் காட்சியளித்தது. கள்வர்களும், தேசத்துரோகிகளும், வேண்டப்படாதவர்களும் கொலை செய்யப்பட்ட இடம் அது. இன்று சில புனிதமான கருவறைகள் கல்லறைகளாக கல்வாரிகளாக மாற்றப்படுவது கசப்பான உண்மையே வேண்டப்படாத சிசுக்கள் இவ்வுலகத்தை காணாமலேயே கொல்லப்பட்டுவிடும் கல்வாரிகளாகின. தமது இன்பங்களினால் தம் வாழ்வுக்கு சுமையாக வந்துவிட்டனர் என்றெண்ணி கொல்லப்படும் கல்வாரிகள் இவைகள்.


அன்றைய கல்வாரியில் இயேசு எனும் மாமனிதன், மனுக்குலத்தை மீட்க வந்த இறைமகன், சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து வந்த தெய்வமகன், போலிகளையும், இரட்டைவேடங்களையும் தகர்க்கவந்த புரட்சியாளன் கொல்லப்பட்டார். மதத்தை காக்கும் மதத்தலைவர்களின் பசப்பு மொழிகளினால் மதி கலங்கிய மக்கட் கூட்டம் "அவனைக் கொல்லும்" என்று குரலெழுப்பி ஆளுனையும் தம் வார்த்தியினுள் சிக்கவைத்து சிலுவையில் அறைந்து கொன்ற கல்வாரி மலை அது. அதுபோலவே எதுவித பாவமும் அறியாத, பாவத்தை செய்யாத பார்க்காத அந்த சிசுக்கள் வாழ்வை வழங்கும் தம் பெற்றோராலும், வாழ்வைக்காக்க உழைக்க வேண்டிய பெற்றோராலும் கொடுமையாக கொல்லப்படும் இடமே இக்கல்வாரி கருவறைகள்.

மாமனிதனை சிலுவையில் 3 ஆணிகளின் மத்தியில் மூன்று மணிநேரம் தொங்கவைத்தனர். அவர்கள் இலக்கும் நிறைவேறியது. கல்வாரியில் கொல்லப்பட்டார். பணப்பேய் பிடித்தலையும் சில வைத்தியர்கள் தமக்குத் தெரிந்த முறையில் சில விவாதங்களை முன்வைத்து நியாயப்படுத்துகின்றனர். கருவறையில் பாது

**சி. லியோ ஆம்ஸ்ரோங்**

காப்பாக இருக்கும் சிசுவை நோக்கி கத்திரி போன்ற ஆயுதங்களால் ஒவ்வொரு அங்கமாக வெட்டிக் கொல்கின்றனர். தாயின் கருவறைக்குள்ளேயே ஊசி போட்டு திணறவைத்து கொன்று விடுகின்றனர். பப்பாய்க்காயையும் அதற்கேற்ற சிலவற்றையும் பயன்படுத்தி கொன்றுவிடுகின்றனர். இதன் வகைகள் பல இருப்பினும் கொலை ஒன்றே. அமெரிக்காவில் இதற்கு எடுக்கும் நேரம் சலூன் ஒன்றில் முடிவெட்ட எடுக்கும் நேரமாம். மதிய உணவு நேரத்தினுள் செய்து முடித்து விடலாமாம். பின்பு வேலைக்கும் செல்ல முடியுமாம் எப்படியிருக்கின்றது இக் கொடூரம்? ஒரு வருடத்திற்கு உலகம் முழுவதும் இடம்பெறும் இக் கருவறைக் கல்வாரிகளின் மொத்த எண்ணிக்கை 40-50 மில்லியனாம். இது எப்படியிருக்கின்றது? வருடக்கணக்காக இடம்பெறும் போரில்மடியும் தொகையினரைவிட இது அதிகமாக இல்லையா?

கல்வாரியில் மரணிக்க முன் இயேசு "தந்தையே, உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்" என குரலெழுப்பி மரணித்தார். இன்றைய கல்வாரியில் கொல்லப்படும் பிஞ்சுகள் "அம்மா, அப்பா ஏன் என்னைக் கொல்கின்றீர்கள்?" எனக் கதறிக்கொண்டிருப்பது இப் "பெற்றோருக்கு" கேட்பதில்லையா? வாழும் உரிமையை இயேசுவுக்கு மட்டுமல்ல இவ்வுலகத்தை காணத்துடிக்கும் பிஞ்சுகளும் மறுத்துவிடும் மனநிலை எம் மனிதரில் உதித்தது எப்படி? இயேசு கொல்லப்பட்டார் இருப்பினும் உயிர்பெற்று எழுந்தார் இச்



சிசுக்கள் கொல்லப்படுகின்றனர். மில்லியன் கணக்கில் இவர்களுக்கும் இவர்களது பெற்றோருக்கும், வைத்தியர்களும் உயிர்ப்பு எப்படி அமையும்? பெண்ணே உன் வயிற்றில் வளரும் குழந்தை உன்னுடையது. இறுதிவரை மறந்திடாதே. அக் குழந்தையின் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது உன்கடமை மட்டுமல்ல எம் கடமையும் கூடவே.

# மரணத்தின் பின்....



இன்றைய உலகம் அடிக்கடி சந்திக்கின்ற ஒரு நிகழ்வு சாவு. இன்றைய உலகம் அடிக்கடி நினைவுபடுத்துகின்ற ஒரு சொல் மரணம். இந்த சாவிற்கு, மரணத்திற்கு விடைகாண முடியாது தவிக்கின்றான் மனிதன். பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் விரும்பியோ, விரும்பாமலோ மரணத்தின் வாயில்களை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கின்றான்

இந்த மனித வாழ்வின் அர்த்தம் என்ன? எங்கள் அருமையான வாழ்க்கை அர்த்தம் இல்லாது மரணம் என்கின்ற இருளிலே முடங்கி பயனற்றுப் போய்விடுமா? இது இன்றைய மனிதன் ஒவ்வொருவனின் உள்ளத்திலும் தொனிக்கின்ற முதல் கேள்வியாக அமைகின்றது. விடையாக நாம் எதைக் கொடுப்பது.

தமிழ் மக்களாகிய எமக்கு இந்த மரணம் சொல்கின்ற செய்திகள் பல! போரின் கொடுமையினாலே மரணத்தை தழுவியவர்கள் பற்பலர். சுகந்திர உணர்விலே மரணத்தை அணைத்தவர்கள் ஆயிரமாயிரம். தேசத்திற்காக மரணத்தை ஏந்தியவர்கள் பலர். இவர்களின் மரணம் அர்த்தம் பொதிந்ததா! இது பெரிய ஒரு கேள்வியாக அமைகின்றது.

மரணத்தின் மூலம் உயிர்கள் எல்லாம் வெறுமனே அழிந்து போகின்றன. என்று யார் சொல்கிறாரோ அவர் கிறிஸ்துவினுடைய உயிர்ப்பை அறியாதவராக, அல்லது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர் என்றுதான் கொள்ளமுடியும். மாறாக ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்டவன். கிறிஸ்தவ

**சகோ பாலதாஸ் பிறாயன்**
**புனித சவேரியார் குருமடம்**

விசுவாசம் என்பது கிறிஸ்துவின் உயிர்ப்பிலே தான் இறுக்கமாக கட்டப்பட்டுள்ளது.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப் படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றும் நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி 15:14)

கிறிஸ்தவனுக்கு சாவு அல்லது மரணம் என்பது பரலோக வாயிலின் திறவுகோல். மனிதன் மரணத்தின் மூலம் தனது பாவ வாழ்விற்கு இறந்து அருள்வாழ்விற்கு உயிர்த்தெழுகின்றான் இது தான் உண்மை.

புதிய ஏற்பாட்டிலே உயிர்ப்பின் மகிமையையும் அதன் உண்மைத் தன்மையையும் நாம் பல இடங்களிலே காணலாம். யாயிருடைய மகளை இயேசு உயிர்ப்பிக்கின்றார். இந்த நிகழ்ச்சியூடாக இயேசு தந்தையில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் இறுதி நாளிலே உயிர்த்தெழுவர் என்று சுட்டிக் காட்டுகின்றார் (மத் 5:41) அத்தோடு லாசரை உயிர்ப்பித்ததன் வழியாக, விதவைப் பெண்ணின் மகனை உயிர்ப்பித்ததன் வழியாக உயிர்ப்பு உண்மையானது என்பதை இயேசு எண்பிக்கின்றார்.

இவை அனைத்திற்கும் கொடுமுடியாக இயேசு சாவின் மேல் வெற்றி கொள்ளுகின்றார். அவர் சாவின் பிடியில் இருந்து உயிர்த்தெழுகின்றார்.

"இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப் படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது" (1கொரி 15:20).

ஆகவே இயேசுவில் நம்பிக்கை கொண்டோர் அனைவரும் சாவின் பிடியில் இருக்க முடியாது. சாவு அவர்களை ஆட்கொள்ளாது. நாம் இயங்குவதும், இருப்பதும் கிறிஸ்துவிலே தான் அவர் வாழும் கிறிஸ்து அவர் வாழ்கிறார். எனவே நாமும் வாழ்கிறோம்.

மரணத்தின் மூலம் கிறிஸ்தவனின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அது அழிக்கப்படுவதில்லை. காரணம் மரணத்தின் பின் நித்திய, நிலையான வீடு ஆயத்தமாகவுள்ளது. எனவே எமது வாழ்விற்கு ஒரு அர்த்தம் உண்டு. இதைக் கொடுப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பு எனவே எம் வாழ்வு கிறிஸ்துவிலே சங்கமிக்கும் போது நிலையான, நித்திய வாழ்வாக நிச்சயம் பரிணமிக்கும்.

*

# எம் வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கும் உயிர்ப்பு

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" என பாடுகின்ற கவிஞனுக்கு மறு உலக வாழ்வு முக்கியம் பெறவில்லை. ஆனால், கிறிஸ்தவர்களுக்கோ "வாழ்வு" வெறுமனே நிலத்தில் புதையுண்டுபோகும் ஒரு வாழ்வு அல்ல, மறு உலக வாழ்வுக்கு மாற்றம் பெறவேண்டிய வாழ்வு. என்றும் நிலைத்துள்ள இறைவன் தம் பரிசாக மனிதனுக்கு வாழ்வைத் தந்தார். அவரே தாம் மானிட வாழ்வை மறுவாழ்வால் புனிதமாக்குகின்றார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பால் மனிதனது உயிர்ப்பு உத்தரவாதம் பெற்றுவிட்டது. கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்பிலேயே மையம் கொண்டுள்ளது. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15:14) இவ்வுலக வாழ்வில் மறுவாழ்வுக்கென உயிர்ந்தவர் கிறிஸ்து ஒருவரே. இயேசுவால் அவர் வாழ்நாட்களில் உயிர்பெற்றவர்களும், திருதூதர்களால் உயிர் பெற்றவர்களும் மீண்டும் இறக்கும் இவ்வுலக வாழ்க்கையே திரும்ப பெற்றுக் கொண்டவர்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பே உண்மையான முடிவில்லா வாழ்விற்கான உயிர்ப்பு "மனித இயல்புகொண்ட உடலாய் விதைக்கப்படும் ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது" (1 கொரி 15:44).

கிறிஸ்துவை போல மக்கள் அனைவரும் உயிர்பெற்றெழுவார்கள் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. இந்த நம்பிக்கையிலேயே மானிட வாழ்க்கை முழுமையான அர்த்தத்தை சுவீகரித்துக்கொள்கின்றது. இறைத்தன்மையில் விளங்கிய இயேசு மனுவுரு ஏற்று சிலுவை சாவு வரை தன்னை தாழ்த்தி உன்னத உயிர்ப்பினால் மடிந்து கொண்டிருந்த மனித வாழ்வுக்கு உயிர்ப்பு கொடுத்து, அதன் மகிமையை நிலைநாட்டினார்.


ஆனால், இன்று மனிதன் அந்த உயிர்ப்பின் அர்த்தத்தை சுவைக்காது, சாவுக்குரிய ஈர்ப்புக்களுக்குதன்னை விட்டுக் கொடுக்கின்றான். போரின் அனர்த்தம் விட்டுவைத்துள்ள வடுக்கள் இன்னும் எம் சமூதாயத்தில் அறவில்லை. "போர் நிறுத்தம்" பின்

**அருட்சகோ**
**அ.பீ. திருமகன்**


ஏற்படவுள்ள சமாதானமும் இவ்வளவு கால கஷ்டங்களின் பலன் என இனங்கண்டு கொள்ளலாம். நசுக்கப்படுதலில் இருந்தும் ஒடுக்கப்படுதலிலிருந்தும் உயிர்பெறும் சமிக்கைகளாக இந்த கால நடவடிக்கைகள் எம் மண்ணில் நிகழ்கின்றன.

போர்க்காலக் கொடுமைகளைப் பற்றி பேசிவிட்டு சாதாரணமாக சமுதாயத்தில் புரையோடியிருக்கும் தீமையின் உருவங்களை இனம் காணத்தவறி விடுகின்றோம். இத்தீமை சாவின் வடிவே. போரினால் பலர் கொல்லப்பட்டார்கள். உண்மைதான், ஆனால், இன்று இறைவனது வாழ்வுக் கொடையை இவ்வுலகில் அனுபவிக்கமுடியாது கருவறைகளிலே சிசுக்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு கொலை செய்யப்படுவது திட்டமிட்ட பாரிய படுகொலைகளே "வயதுவந்தவர்கள்" புரியும் கலாச்சாரச் சீரழிவுச் செயற்பாடுகளின் விளைவுகள் போரினால் எம் மண்ணில் நிகழ்ந்த அழிவுகளிலும் மேலானவையாக் உள்ளன. சுயநலப்போக்கும் பிறர் உயர்வில் பொறாமை கொள்ளும் மனநிலையும் சாவிலேயே மூழ்கியுள்ளோம் என்பதற்கு எடுத்துக் காட்டுக்களாக உள்ளன.

வெற்றுக்கல்லறை இயேசுவின் உயிர்ப்புக்கு சான்றானது போல பாவம் களையப்பட்ட வாழ்வு எம் புதுவாழ்வுக்கும் தூய்மையான



வாழ்வுக்கும் சான்றாகட்டும். தீமையின் ஈர்ப்புக்களை எதிர்ப்பதாலும் சாவுக்குரிய பாவவாழ்வை விலக்குவதாலும் இவ்வுலகிலேயே உயிர்ப்பின் அனுபவத்தை பெற்று மறு உலக வாழ்வை எதிர்நோக்கி எம் கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்போமாக.



இளையோர் ஆணைக்குழுவினரால் பாடசாலை மாணவர்களுக்கு விழுமியக் கல்வி பற்றிய கருத்தரங்கு புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 - 05 - 1951

உதிர்வு 12 - 04 - 2001

### அருள்திரு பற்றிக் இம்மானுவேல் (குணேன்)

கடல் கடந்து சென்று இறைபணியாற்றினீர் இறைசந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற இறைவன் அருள்வாராக!

திருமதி சில்வியா இம்மானுவேல்,
திருமதி ராணி அரியநாயகம்

54/3, சந்தனமாதா கோவில்
முன் ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

## விண்ணக வாழ்வின்

27ஆம் ஆண்டு — 25ஆம் ஆண்டு





**ஜெயமணி (ரீற்றா) அருளானந்தம்** — **யோனிஸ் மரியாம்பிள்ளை**

| | | |
|---|---|---|
| 29.11.1932 | மண்ணில் | 06.09.1901 |
| 27.03.1975 | விண்ணில் | 09.03.1977 |

அன்பினைப் பகிர்ந்தீர், பண்போடு வளர்த்தீர்!
சீவியத்தில் நேசித்தோம். மரணத்தில் மறவோம்.
இறைவனில் இளைப்பாற என்றும் வேண்டுவோம்.

அருளானந்தம் ஜெயராஜ் குடும்பத்தினர்
(லண்டன்)

## 1ஆம் வருட நினைவினிலே



மறைவு 19 - 03 - 2001

தோற்றம் 20 - 01 - 1959

### அமரர் சவிரிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை

வருடம் ஒன்று சென்றதையா!
நாம் உந்தன் திருவதனம் கண்டு
பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் இருப்பிடமே!
நேசமுடன் எம்மை வளர்த்தெடுத்த அன்பு அப்பாவே!
துணையாய் இருந்தீர்! பெருமை பெற்றோம் நாம்!
நீர் பிரிந்து ஓராண்டானாலும்
எம் மனதை விட்டு நீங்கவில்லை ஐயா!
என்றும் இறைவனின் பாதத்தில் - நீர்
வாழ இறையருளை வேண்டுகின்றோம்.

பிரிவின் துயரில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

அருட்சகோ சில்வியா
திருச் சிலுவை கன்னியர் சபை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி றோமான் மாகிறேட் நல்லம்மா

மலர்வு : 04.12.1920
உதிர்வு : 10.02.2002

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
(அருளப்பர் 11:25)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள

303, கச்சேரி நல்லூர்
வீதி, யாழ்ப்பாணம்

## விண்ணக வாழ்வில்...

18 ஆண்டுகள் — 3 ஆண்டுகள்





**மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற ஆசிரியர், சென். யோசப் கல்லூரி, திருகோணமலை)

**சூசைப்பிள்ளை இரத்தினம்**
(ஒட்டகப்புலம்)

| | | |
|---|---|---|
| 09-12-1916 | மண்ணில் | 22-05-1921 |
| 11-04-1984 | விண்ணில் | 01-02-1999 |

அமைதியின் திருவுருவங்களாய்
பாசத்தின் உறைவிடங்களாய்
குடும்பத்தின் ஒளி விளக்குகளாய்
திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களே
உங்கள் நினைவுகள் என்றும்
எம் இதயத்தில் பசுமையாய்
நிலைத்திருக்கும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.5, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.


"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து விட்டால் அவன் அடையும் ஆதாயம் என்ன," (லூக். 9:25)

இளைஞனே... அழைப்பின் குரல் கேட்கிறதா?

உத்தம தனத்தில் உயர்ந்து நின்று
உன்னையும் காத்து, உன்னத வாழ்வுக்கு
ஆன்மாக்களைத் தூக்க விரும்புகிறாய்.?

செப வாழ்வில் செகத்தினை மீட்க,
செம்மறியானவரின் அழைப்பின் குரல் கேட்கிறதா....

செபமாலைத் தாஸர் சபை, உன்னை உருவாக்க அழைக்கிறது...

இறைவனில் உன் வீட்டைக் கட்ட புதிய பாதையில் வழி நடக்க எழுந்து வா

க.பொ.த (சா.த) சித்தி அடைந்தவர்கள் உடன் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
அதிபர், அருள் ஆச்சிரமம்
5 கோயில் வீதி
யாழ்ப்பாணம்.


### அன்பிய ஊக்குவிப்பாளர் தவக்காலத் தியானம்

பருத்தித்துறை மறைக்கோட்ட அன்பிய ஊக்குவிப்பாளர் தவக் காலத் தியானம் பங்குனி 16ஆம் திகதி சனிக்கிழமை புனித தோமையார் ஆலயத்தில் காலை 9மணி முதல் 12மணி வரை நடை பெற்றதென அன்பிய இயக்குனர் சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் தெரிவிக்கிறார்.

### புனித வளனார் அச்சகத் திருவிழா சாட்டியில்...

வளன் கத்தோலிக்க அச்சகத் தினர் தமது பாதுகாவலர் புனித சூசையப்பரின் திருவிழாவை இம் முறை வெகுவிமரிசையாகக் கொண்டாடினர்.

அன்றைய தினம் காலை திரு நாள் திருப்பலியை நிறைவுசெய்து கொண்டு சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்துக்கு யாத்திரை சென்று அந்நாளை மகிழ்வாக கொண்டாடினர்.

அன்று காலை பனைமரங்க ளும், மாமரங்களும், எலுமிச்சை மரங்களும் வளன் கத்தோலிக்க அச்சக மூத்த பணியாளர்களால் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 1ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு 16 - 06 - 1933

உதிர்வு 30 - 03 - 2001

### திருமதி ஏரோணி மேரிறோஸ் (றோசலின்)

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் உயிர் வாழ்வான்"

விளக்கேற்றி வைத்த எம் விடிவிளக்கே
விளக்காய் நீயிருந்ததை நாம் மறப்போமா
நிலையில்லா வாழ்க்கையில் நிம்மதிகள் இல்லையென
நிரந்தரமாய் எம்மை விட்டு பிரிந்து சென்றீரோ!

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். புனித மரியன்னை பேரா லயத்தில் 01.04.2002 திங்கட்கிழமை மதியம் 11.00 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவில் துயருறும்
சகோதரர், சகோதரி,
உற்றார் உறவினர்.

"அருள்யோ றோஸ்வாசா"
41 பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## இளையோர்க்கான தவக்காலத் தியானம்

யாழ். மறைமாவட்ட இளை யோர்க்கான தியானம், பங்குனி 10ம் திகதி ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 1.00மணி வரை மறைக்கோட்ட ரீதியாக நடை பெற்றது. இளவாலை மறைக் கோட்ட தியானம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் பி.யே. ஜெபரெட்ணம் அடிகளார் தியான உரைகள் வழிபாடுகள் நடாத்தி உதவி செய்தார். 300 இளையோர்மட்டில் கலந்துகொண் டார்கள். யாழ். மறைக்கோட்ட இளையோர்க்கான தியானம் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் மைக்கல் சவுந்தரநாயகம் அடி களாரின் தியான உரைகள் இளை யோர் தமது தியானத்தை தொடர உதவியளித்தார்.

இன்றைய இளையோர் ஆன் மீகத்தில் வளர்ந்து, தமது வாழ் வின் தேடலிற்கு விடைதேடும் உள்ளங்களிற்கு இத் தியானம் பெரும் ஆறுதலாலும் நிறைவாயும் அமைந்துள்ளதாக இளையோர் பலர் தெரிவித்தார்கள், இன்னும் பாவசங்கீர்தன அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ள சிறந்த வாய்ப்பு பெற்றதாகவும் சொல்லி நிறைவு அடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகர நிலையும் மக்கள் வாழ்வும் கலாசார அமைப்பும் ஒரு புதுப்பொலிவு பெறும் காலம் வருகிறது

## யாழ். ஆயரின் ஈஸ்ரர் செய்தி

2002ஆம் ஆண்டிற்குரிய ஆண்டவர் யேசுவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும்போது மன மகிழ்வும் உள நிறைவும் விடுதலை உணர்வுமே மேலோங்கி இருக்கிறது.

ஆண்டவர் இயேசு பாடுகள், மரணம் என்கின்ற துயர அனுபவங்கள் வழியாக உயிர்ப்பு என்னும் உன்னத நிலையை அடைந்தார். எமது அன்றாட வாழ்வில் நாம் அனுபவித்த, அனுபவிக்கின்ற துன்ப துயர அனுப வழியாகத்தான் விடுதலையையும், மீட்பையும் பெறுவோம் என்ற உண்மையை எமக்குக் கற்றுத்தந்தார். இவ்வாண்டு ஆண்டவர் யேசுவின் உயிர்ப்பு விழா இந்த உண்மையை எமக்கு நிஜமாக்குகிறது என்று கூறலாம்.

### 3ஆம் தரப்பு மத்தியஸ்தம்

மிக நீண்டகாலமாக 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடனேயே எமது மண்ணின் இனப்பிரச்சனைக்கு நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வினை எட்ட முடியும் என சம்பந்தப்பட்ட தலைவர்களுக்குக் கருத்துத் தெரிவித்து, அதனை காலத்துக்குக் காலம் வலியுறுத்தியும் வந்தோம்.

3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடனேயே இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த சமாதான செயற்பாடுகள் எந்தவித தடையோ, தடங்கலோ இன்றி முழு வெற்றி காண எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இந்த சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவும், தமிழ் மக்கள் வாழ்வில் இயல்பு நிலை திரும்பவும், சமாதான ஒளிக்கீற்று தென்படவும் உழைத்தவர்களும் அர்ப்பணித்தவர்களும் நன்றிக்குரியவர்கள்.

நோர்வே அரசும் அதன் இணைப்பாளர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அவர்களும் செய்த ஆரம்பப் பணிகளுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றியுடையவர்களாய் இருப்பார்கள்.

### பிரதமர்

மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசினை பொறுப்பேற்றது முதல் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதை முதன்மையான பணியாக்கி முன்னுரிமை கொடுத்து உழைத்துள்ளார். எந்த எதிர்ப்பிற்கும் அஞ்சாது துணிவோடு களமிறங்கினார்.

### விடுதலைப் புலிகளின் தலைவர்

மதிப்பிற்குரிய விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் நீண்ட காலப்போர் அழிவுகள், பயங்கர வாழ்க்கை என்பவற்றின் மத்தியில்பல போராளிகள் தமிழ் மக்கள் ஆகியோரின் உயிர்களைப் பறிகொடுத்த பின்னரும் நம்பிக்கையைத் துணிவாக்கி இச் சமாதான முயற்சிக்கு இணங்கியுள்ளார்.

நிட்சயமாக நிரந்தர அமைதி எற்பட்டவுடன் இவர்கள் இருவரும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மாமனிதர்கள் என்பதில் ஐயமில்லை.

### ஜனாதிபதி

மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கும் ஒரு செய்தியுண்டு. அவர் புகழ் பூத்த பரம்பரை அரசியல் குடும்பத்தில் பிறந்தவர். தாயும் தந்தையும் இந்நாட்டு பிரதமர்களாய் இருந்தவர்கள். இவர் தமிழ் மக்கள் விடிவிற்கு வழிவகுப்பார் என நம்பிக்கையோடு எதிர்பார்த்தோம்.

தமிழ் மக்களுக்கு வரலாற்றில் தவறிழைக்கப்பட்டுள்ளது, அது சரி செய்யப்பட வேண்டும் என பகிரங்கமாக ஒப்புக்கொண்ட முதல் சிங்களத் தலைவர் இவர். தனது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இப்போ நடக்கும் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருந்து தனதுபெயரை இன்னும் கெடுத்துக்கொள்ள வேண்டாமென அன்புவேண்டுகோள் விடுக்கிறோம்.

நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் பொறுப்போடும் புரிந்துணர்வோடும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி, அரச பதவிக் காலம் முடியு முன்னர் தமிழ் மக்களின் நீண்டகாலத் துன்பத்திற்கு நிரந்தர தீர்வினைக் காண முழுமையாக ஒத்துழைக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம்.

### எதிர்க்கட்சிகள்

எதிர்க்கட்சிகள் என்பதன் அர்த்தம் எதற்கும் எதிர்க்கும் கட்சிகளல்ல என்பதை அரசியல் பின்னணியில் தெளிவாகப் புரிந்துகொண்டு எதிர்க்கட்சியும், இதர கட்சிகளும், அரசியலில் தீவிர போக்குடைய கட்சிகளும் செயற்பட வேண்டிய காலம் இதுவாகும். எல்லா கோபதாபங்களையும் அரசியல் வேற்றுமைகளையும் மறந்து இறுதிவரை உறுதியாக அர்ப்பணிப்புடன் செயல்ப்பட்டு இனப் பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வினைக் காண முன்வரும்படி இவர்களுக்கும் அழைப்புவிடுக்கின்றோம். உங்களுக்கும் நிட்சயமாக இச் சமாதானத் தீர்வில் ஒரு பங்கு இருந்தது என்பதை சரித்தரிரம் ஒருபோதும் மறக்காது.

### பௌத்த மதத் தலைவர்கள்

பௌத்த மதத் தலைவர்களே, உங்களில் பொறுப்புள்ள பலர் சமகாலத்தில் சமாதானத்துக்காக ஓங்கிக் குரல் கொடுப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

உங்களால்தான் இப்பிரச்சனைக்கான தீர்வில் முழுமையைத் தர முடியும். இதை நீங்கள் குழப்புவதாலும் எதிர்ப்பதாலும் தமிழ் மக்களின் உயிர்களை மட்டுமல்ல, சிங்கள மக்களின் உயிர்களையும் கொல்ல கங்கணம் கட்டி நிற்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் சில அரசியல் கட்சிகள், சில பௌத்த மதத் தலைவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் வேளையில் மற்றவர்களுக்கும் இம்முயற்சியைக் குழப்பவேண்டாமென இலங்கைவாழ் இரு இன மக்கள் பெயராலும் வேண்டிக் கொள்கின்றோம்.

### விடுதலைப் புலிகள்

யாழ்ப்பாண நகர நிலையுட, மக்கள் வாழ்வும், கலாசார அமைப்பும் ஒரு புதுப்பொலிவு பெறும் காலம் வருகிறது என தமிழ் மக்கள் அனைவரும் மகிழ்வோடு இருக்கிறார்கள்.

புலிகளின் வருகையை மக்கள் நிட்சயமாக வரவேற்கிறார்கள். மனித வாழ்வின் உச்சமான உயிரையே துட்சமென ஒரு பொதுநோக்கிற்காக அர்ப்பணித்த உங்கள் தியாகம் அளவிட முடியாதது. உங்கள் வரவின் பின் தம் வாழ்வு எப்படி இருக்குமோ என மக்கள் மனதில் ஒருவித அச்சமும் அங்கலாய்ப்பும் இருக்கிறது என்பது உண்மையே.

சட்டத்தையும், ஒழுங்கையும், மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்ற உங்கள் பணியினை செய்யும்போது வசதிகளும் வாய்ப்புகளும் அற்ற நிலையில் துன்பத்தையும் துயரத்தையுமே வாழ்வின் பெரும்பகுதியில் அனுபவித்த மக்களை அனுதாபத்தோடு அணுகும்படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அன்பு அழைப்பு விடுக்கின்றோம். தேவையற்ற விதிகளையும் வரிகளையும் தவிர்த்து தனியார் தொழில் முயற்சிகளை ஊக்குவித்து அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக வாழ வழிசெய்யுங்கள்.

நீண்டகால தமிழ் மக்கள் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திய இதர தமிழ்ப் பிரதிநிதிகளையும், கட்சிகளையும் தூக்கியெறியாமல் அவர்களுக்கும் உரிய இடம் கொடுங்கள்.

### தமிழ்க் கட்சிகள்

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இக்காலத்தில் காத்திரமான ஒரு பொறுப்பு உண்டு. தமது கட்சி நலன்களையே பேணுவதைவிட தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றுவதே முதன்மையானது என்ற சிந்தனையுடன் ஒன்றுபட்டு ஒருமனதுடன் உங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

### முஸ்லிம்கள்

வட பகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது துரதிஷ்டவசமானது. அவர்களுடைய வீடுகளும் வதிவிடங்களும் கைவிடப்பட்டு அழிவடைந்த நிலையில் இருப்பது வேதனைக்குரியது. அவர்கள் வெளியேற்றப்பட்டது வரலாற்றில் பெரிய தவறு என இப்போது உணரப்பட்டுள்ளது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சரிசெய்யும் முகமாக அவர்கள் அனைவரும் மீள குடியேற்றப்படவும் வாழவசதி செய்யப்படவும் வேண்டுமென சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்புவிடுக்கிறோம்.

### பத்திரிகைகள்

இன்றைய நிலையில் பத்திரிகைகளுக்கும் ஒரு சிறப்பான பணியுண்டு. உங்கள் பணி மிக முக்கியமானது. ஆக்கவும், அழிக்கவும் வல்லது பத்திரிகைகள் என்று சொல்லுவார்கள். ஆக்கத்திற்காகவே எப்போதும் உழையுங்கள். மக்களைக் குழப்பும் செய்தியையோ, பிரச்சனைகளைத் தூண்டும் செய்திகளையோ பத்திரிகா தர்மத்தின் வழியில் தவிர்த்து விடுங்கள்.

கத்தோலிக்கர்களும், இந்துக்களும் அக்கம்பக்கத்தில் அன்புடனும் நட்புடனும் வாழ்ந்த மண் இது. கத்தோலிக்க மக்கள் கிறிஸ்தவ சபையாரோடு வைத்திருந்த உறவையும் நம்பிக்கையும் காட்டிலும் இந்துக்களோடு வைத்திருந்த உறவும் நட்பும் ஆழமானது என்பது ஒரு நிட்சயமான உண்மை.

கத்தோலிக்க மக்கள் இங்கு சிறுபான்மையினர் என்றாலும் அவர்களுக்கும் சம உரிமைகள் உண்டு. நாட்டு யுத்தத்தின் முடிவில் சமய யுத்தம் என்ற தோற்றப்பாட்டை வளர்த்துவிட வேண்டாம் என வேண்டுகிறோம்.

### இளைஞர்கள்

நாளைய சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டிய இளையோரே! உங்களுக்கும் ஓர் அழைப்பு உண்டு. துணிவும், துடிப்பும் நிறைந்த வயது கொண்ட உங்களின் செயற்பாடுகளிலே எமது மண்ணின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. துடிப்பான இளைமையை கட்டுப்பாட்டோடும் கண்ணியத்தோடும் பாதுகாத்து வளர்த்து வாருங்கள். நாளைய சமுதாயத்தின் தலைவர்கள் நீங்கள் என்பதை உணர்ந்து பொறுப்போடு செயற்பட்டு வாருங்கள்.

எமக்குரிய தனித்துவமான கலாசாரக் கட்டுக்கோப்பை பாதுகாப்பதும் நற்பண்புகளை பேணி வளர்ப்பதும் பொறுப்பு வாய்ந்த இளைஞரே உங்கள் கடமையாகும். கலாசாரத்துக்கெதிரான சக்திகள், மாற்றுக் கலாசாரம் என்பன உள்ளிட்டு எம்மை சிதறடிக்காமலிருக்க பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பு.

மிக நீண்டகாலமாக எமது செய்திகளாலும் வேண்டுதல்களாலும் சமாதானம் வரும் என்ற நம்பிக்கை கூறிக்கொண்டிருந்தோம். "அஞ்சாதீர்கள், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்"(மத்.28:5-6) என்ற நம்பிக்கையோடு எம் வாழ்வைத் தொடருவோம். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்போடு அந்த நம்பிக்கை எமது மண்ணில் பேரொளியாய் வீச வாழ்த்துகின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ். ஆயர்**



நாவாந்துறையிலிருந்து பாசையூர் வரை "வாழும் உரிமையை உறுதிப் படுத்துவோம்" எனும் தலைப்பில் யாழ். நகர வீதியூடாக நடத்தப்பட்ட மாபெரும் சிலுவைப் பாதை. (படம் : போல் றொகான்)

## பாதுகாவலன் ஆசிரியரின் ஈஸ்ரர் வாழ்த்து!

# சிறிய ஒளிக்கீற்று பேரொளியாய் மாறட்டும்!

எமது மண்ணில் மீண்டுமொரு அமைதியின் ஒளிக்கீற்று தோன்றியுள்ள வேளை ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றோம்.

கடந்த பல வருடங்களாக சமாதானத்தின் ஒளிக்கீற்றுக்கள் வேறுபட்ட காலங்களில் பல இடங்களிலிருந்தும் தோன்றியிருந்தாலும் சமாதானம் எமக்கு ஒரு தூரத்துப் பொருள் என்ற அனுபவமே கிடைத்தது.

2002ஆம் ஆண்டு எம் மண்ணில் தோன்றியுள்ள இந்த ஒளிக்கீற்று இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவரிலும் நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் ஒரு நீண்ட எதிர்பார்ப்பையும் தோற்றுவித்துள்ளது. இந்த ஒளிக்கீற்று எம் மண்ணில் என்றும் நின்று நிலைக்கவும் நீதியோடுகூடிய நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தரவும் நாம் ஆசிக்கிறோம்.

பாதுகாவலன் பத்திரிகை கடந்த காலங்களில் சமாதானத்துக்குக் குரல் கொடுத்து ஒரு சமயப் பத்திரிகையாக தன்னை இனங்காட்டியுள்ளது. சமய செய்திகளையும், சம்பவங்களையும் மட்டுமே பிரசுரிக்கும் ஒரு வெறும் சமயப் பத்திரிகையாக இல்லாமல் தான் வெளியாகின்ற மண்ணையும், மக்களையும் அவர்களின் துன்பங்களையும், துயரங்களையும் வேதனைகளையும் பகிர்ந்துகொள்ளும் ஒரு சமயப் பத்திரிகையாக பணியாற்றியுள்ளது.

குறிப்பாக, தமிழ் மக்களின் நீண்டகாலத் தேவையாகிய சமாதானத்தைப் பெற்றெடுப்பதற்கு எம்மண்ணில் எம் மக்கள் மத்தியில் நடந்த நிகழ்வுகளையும் சம்பவங்களையும் ஏதோவொரு வகையில் தன்னோடு இணைத்துக் கொண்டு அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதன்வழியாக சமாதானம் மலர உழைத்திருக்கின்றது. அந்தவகையில் பாதுகாவலன் பத்திரிகை சமாதானத்திற்கு குரல் கொடுத்த சமயப் பத்திரிகை என்ற ஒரு பெயரையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இனி வருங்காலங்களிலும் மண்ணையும், மக்களையும் அவர்களுடைய இன்பங்களையும், துன்பங்களையும் ஏற்றுக்கொண்டும் தாங்கிக்கொண்டும் பகிர்ந்து கொண்டும் அவற்றில் வளர்ந்து கொண்டும் வரும் ஒரு சமயப் பத்திரிகையாகவே அது இருக்கும்.

இன்று எம்மண்ணில் தோன்றியுள்ள இச்சமாதானநிலை ஒரு சிறிய ஒளிக்கீற்றுத்தான். இது பேரொளியாய் மாறி இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் அனைவரும் சுதந்திரத்தோடு வாழ ஒளிவீசும் பேரொளியாய் மாற உயிர்த்த இயேசுவிடம் அருள் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஓவ்செற் முறையில் 2002ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197 T.P.2378